02 - 94

30-07-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=

# Saturday மெயில்

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
01 AUG 2011
PERIODICALS DIVISION





# உலகை வசீகரிக்கும் பெண் அமைச்சர்

அருத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சரியத்தில் ஆழ்த்திய தங்க மீன்கள்

நியூஸிலாந்தில் 2 தங்க நிற மீன்கள் உணவின்றி 134 நாட்கள் உயிருடன் இருந்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளன.

நியூஸிலாந்து கிரைஸ்ட்சர்ச்சில் உள்ளது குவாண்டம் பட்டயக்கணக்காளர் அலுவலகம். அதன் வரவேற்பு அறையில் 100 லீற்றர் தண்ணீர் பிடிக்கும் ஒரு மீன் தொட்டியில் ஷாகி, டாப்னி என்று பெயரிடப்பட்ட 2 தங்க நிற மீன்கள் உள்ளன.

அண்மையில் நியூஸிலாந்தில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டு 181 பேர் பலியாகினர். அந்த நிலநடுக்கத்திற்குப் பிறகு இந்த மாதம் தான் அலுவலகத்துக்கு ஊழியர்கள் பணிக்குத் திரும்பினர். அலுவலகத்திற்குள் நுழைந்தவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டனர். காரணம் கடந்த 134 நாட்களாக யாருமே அலுவலகம் வராத நிலையில் உணவின்றி அந்த 2 தங்க நிற மீன்கள் உயிருடன் உள்ளன.

இது குறித்து கலிபோர்னியாவின் மாண்டரே பே அக்வாரியத்தின் மேற்பார்வையாளர் பால் கிளார்க்சன் கூறுகையில்; 'அந்த மீன் தொட்டியில் இருந்த பக்றீரியா தண்ணீரை சுத்தமாக வைத்திருந்திருக்கக்கூடும். மீன்கள் அந்தத் தொட்டியில் வளர்ந்த நீர்ப்பாசியை உண்டு உயிர் வாழ்ந்திருக்கும். ஆனால் அதே தொட்டியில் இருந்த மேலும் 3 தங்க நிற மீன்கள் இருந்த அறிகுறியே இல்லை' என்றார்.



## உலகை...

பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சராக ஹினா ரபனிகர் நியமிக்கப்பட்டு பத்து நாட்கள் தான் ஆகிறது. அதற்குள் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துவிட்டார் ஹினா. அவரது புகைப்படங்களை பிரசுரிப்பதிலும் அவர் தொடர்பான வீடியோக் காட்சிகளை ஒளிபரப்பவும் சர்வதேச ஊடகங்கள் போட்டி போடுகின்றன.

இதுவரை பயங்கரவாதத்தை ஒழிப்பதில் பாகிஸ்தான் அக்கறை காண்பிப்பதில்லை. தீவிரவாதிகளின் புகலிடமாக பாகிஸ்தான் திகழ்கிறது என்றெல்லாம் பாகிஸ்தான் குறித்த எதிர்மறைக் கருத்துகளையும் அது தொடர்பான புகைப்படங்களையும் வெளியிட்டு வந்த உலகின் முன்னணி நாளிதழ்கள் மற்றும் வார சஞ்சிகைகளெல்லாம் தற்போது மொடல் அழகி போன்ற வசீகரத் தோற்றமும் அறிவுத் திறனும் கொண்ட இளம் பெண் ஒருவரை அயலுறவுத்துறை அமைச்சராக நியமித்து பாகிஸ்தான் தற்போது சந்தித்து வரும் நெருக்கடியை விவேகமாக எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளதாக புகழாரம் சூட்டிக் கொண்டிருக்கின்றன.

அல்ஹைடா தலைவர் ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் வைத்து அமெரிக்கப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதன் மூலம் பாகிஸ்தானின் புகழ் உலக நாடுகளில் அதல பாதாளத்திற்குள் சரிந்தது.

இந்தச் சூழ்நிலையில் இந்தியாவின் மும்பையில் அண்மையில் தொடர் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இந்தச் சம்பவம் பாகிஸ்தான் மீது மீண்டும் உலக நாடுகளின் பார்வையைத் திருப்பவே அந்நாடு வெகுவாகவே அவஸ்தைக்குள்ளானது. இதனையடுத்தே தனது அயலுறவு நடவடிக்கைகள் மற்றும் தோற்றத்தை மாற்றுவதற்கான வியூகத்தை வகுத்தது. அதன் ஒரு அம்சமாகவே திறமையும் புத்திசாலித்தனமும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டால் எதிர்த்தரப்பின் கடுமையைக் குறைத்து வசீகரிக்கும் அழகு கொண்ட ஹினா ரபானிகர் என்ற 34 வயது அழகுப் பெண்ணைத் தனது வெளியுறவுத்துறை அமைச்சராக கடந்த 20 ஆம் திகதி நியமித்தது பாகிஸ்தான்.

பாகிஸ்தான் வரலாற்றில் அதன் வெளியுறவுத்துறை அமைச்சராக பெண் ஒருவர் நியமிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவை நினைவுபடுத்தும் இந்த அழகு அமைச்சரும் பாரம்பரிய அரசியல் குடும்பப் பின்னணி கொண்டவர்தான்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள முல்டான் என்ற இடத்தில் 1977 ஆம் ஆண்டு ஜனவரி 19 இல் பிறந்த ஹினாவின் குடும்பம், செல்வச் செழிப்பு மிக்க குடும்பமும் கூட. ஹினா குடும்பத்தினருக்குச் சொந்தமாக ஏராளமான மீன்பிடிப் படகுகள் கொண்ட மீன்பிடித் தொழிலும் மாந்தோப்புகளும் கரும்பு வயல்கள் உள்ளிட்ட ஏராளமான விவசாயத் தொழில்களும் உள்ளன.

லாகூர் பல்கலைக்கழகத்தில் நிர்வாக அறிவியலில் பி.எஸ்.சி. பட்டம் பெற்ற ஹினா, அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் ஹோட்டல் முகாமைத்துவப் படிப்பில் எம்.எஸ்.சி. பட்ட மேற்படிப்பை பயின்றுள்ளார்.

இவரது தந்தை குலாம் ரபானி, பஞ்சாப் மாகாணத்தின் முதுபெரும் அரசியல் தலைவர்களில் ஒருவர். இவரது மாமாதான் பஞ்சாப் மாகாண முதலமைச்சர். ஃபெரோஷ் குல்சார் என்ற தொழிலதிபரை திருமணம் செய்து கொண்டுள்ள ஹினாவுக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள்.

தந்தையும் மாமாவும் அரசியலில் இருக்க ஹினாவுக்கு அந்த ஆசை வராமல் போகுமா என்ன? 2002 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹினாவுக்கு அரசியலில் அப்போது முதல் ஏறுமுகம்தான்.

2008 தேர்தலில் ஹினாவுக்கு பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி தேர்தலில் போட்டியிட ரிக்கெட் கொடுக்க மறுக்கவே பாகிஸ்தான் மக்கள் கட்சியில் சேர்ந்து போட்டியிட்டு 84 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் [illegible] மீண்டும் எம்.பி. யானார்.

தொடர்ந்து பிரதமர் யூசுப் ரஸா கிலானி தலைமையிலான அமைச்சரவையில் பொருளாதார மற்றும் புள்ளியியல்துறை இணையமைச்சராகப் பணியாற்றிய அவர், 2011 பெப்ரவரியில் அயலுறவுத்துறை இணையமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில்,அயலுறவுத்துறை அமைச்சராகப் பதவி வகித்த ஷா முகமத் குரேஷி, அப்பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதும் 2011 பெப்ரவரி 13 ஆம் திகதி வெளியுறவுத்துறையின் தற்காலிக அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து தான் கடந்த 20 ஆம் திகதி அன்று அதிகாரபூர்வமாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறையின் கெபினட் அமைச்சராக நியமிக்கப்பட்டார் ஹினா. அப்போதே உலக நாடுகளை குறிப்பாக மேற்குலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தார்.

இவர் வெளியுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டதை வெகுவாகப் புகழ்ந்து எழுதும் பாகிஸ்தான் ஒப்சர்வர் போன்ற அந்நாட்டு ஆங்கில ஏடுகள் அண்மையில் ஹிலாரி கிளின்டனுடன் ஹினா நடத்திய பேச்சுவார்த்தையின்போது அவரது தைரியமான பேச்சும் அணுகுமுறையும் உடல் அசைவு எனப்படும் உடல் மொழியும் ஹிலாரியை வெகுவாகவே கவர்ந்ததாகவும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் பாகிஸ்தானும் ஏகப்பட்ட இழப்புகளைச் சந்தித்துள்ளதாக புள்ளி விபரங்களுடன் அவர் முன்வைத்த வாதத்தைப் பார்த்து ஹிலாரி அசந்து போனதாகவும் புகழாரம் சூட்டுகின்றன.

இந்த நிலையில்தான் இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக டில்லி வந்தார் ஹினா.

வழக்கமாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் டில்லி வந்தால் விமான நிலையத்தில் வந்திறங்குவதைப் படம் பிடித்து சம்பிரதாய செய்தியாக வெளியிடுவது இந்திய ஊடகங்களின் வழக்கம். [illegible] வசீகரமும் மொடல் அழகி போன்ற தோற்றத்துடனும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சராக ஒருவர் வந்திறங்குவார் என்று தொலைக்காட்சி கமராமேன்களும் பத்திரிகை புகைப்படக்காரர்களும் எதிர்பார்க்கவே இல்லை.

ஆங்கிலத்தில் '*Stunning Beauty*' என்று சொல்வார்களே அதுமாதிரி அசர அடிக்கிற அழகுடன் வந்திறங்கிய ஹினாவை இந்திய பத்திரிகை புகைப்படக்காரர்களும் தொலைக்காட்சி கமராமான்களும் வளைத்து வளைத்துப் படம் பிடித்ததைப் பார்த்து ஹினா சற்று வெட்கப்பட்டுத்தான் போனார்.

இந்த நிலையில் தான் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளார் ஹினா.

இப்பேச்சுவார்த்தையில் பெரிய அளவில் முடிவுகள் எதுவும் எட்டப்படாது என்று முன்னரே கூறப்பட்டபோதிலும் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக இருந்ததாக ஹினா செய்தியாளர்களிடம் கூறினார்.

அதேசமயம், கடந்த காலங்களைப் போன்றல்லாமல் இந்த முறை இந்தியா-பாகிஸ்தான் இடையேயான பேச்சுவார்த்தை இறுக்கமாக அல்லாமல் உற்சாகமான சூழலில் நடந்ததாகவும் இதற்கு ஹினா முக்கிய காரணம் என்றால் அது மிகையல்ல என்றும் கூறுகின்றனர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு அதிகாரிகள்.

பாகிஸ்தானில் பெனாசிர் பூட்டோவுக்குப் பின்னர் ஒரு வசீகரமான,வலிமையான, விவேகமான ஒரு தலைவர் இல்லாமல் இருந்த நிலையில், ஹினா ரபானி அந்த இடத்தைப் பூர்த்தி செய்வார் என்றும் எதிர்காலத்தில் பாகிஸ்தான் பிரதமர் பதவியில் ஹினா அமரப்போவது நிச்சயம் என்றும் அடித்துக் கூறுகின்றன பாகிஸ்தான் ஊடகங்கள்.

எப்படியோ இந்தியா-பாகிஸ்தான் இடையேயான உறவில் ஒரு புதிய நல்லத்தியாயம் மலர ஹினா போன்ற இளம் தலைவர்கள் இரு நாடுகளிலும் நிறையப் பேர் உருவாகட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# இலங்கைப் பயணத்தில் நடிகர்களான பாடகர்கள்

திரைக்குப் பின்னாலும் படு திறமையாக நடிப்பவர்கள் சினிமாக்காரர்கள் என்பது மீண்டும் ஒரு முறை நிரூபணமாகியுள்ளது.

இலங்கையில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் பலியானதை சற்றுத் தாமதமாக உணர்ந்து உலகமே அதிர்ச்சியடைந்துள்ளது. இலங்கையை போர்க் குற்றவாளிப் பட்டியலில் சேர்த்துள்ளனர் உலக மக்கள்.

இதனால் இலங்கைக்கு நடிகர்-நடிகைகள் செல்லக் கூடாது என திரைப்பட கூட்டுக்குழு ஏற்கனவே தடை விதித்துள்ளது. நடிகர் சங்கமும் இந்தத் தடையை வலியுறுத்தி வருகிறது. சீமானின் நாம் தமிழர் இயக்கம் இது குறித்து தீவிர பிரசாரம் செய்து வருகிறது.

இவை எல்லாம் தெரிந்த பிறகும், இலங்கை ஜனாதிபதிக்கு ஆதரவாக ஆடிப்பாடி தேர்தல் பிரசாரம் பண்ணத்தான் மனோ, பாடகி சுசித்ரா, கிரிஷ் உள்ளிட்டோர் சில தினங்களுக்கு முன் இரகசியமாக இலங்கைக்குப் போனார்கள். இவர்களின் கெட்ட நேரம், இந்தப் பயணம் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. வைகோ மற்றும் நெடுமாறன் இருவரும் மிகக் கடுமையான எச்சரிக்கையை விடுத்தனர். நடிகர் சங்கமும் உடனே நாடு திரும்புமாறு இவர்களுக்குச் செய்தி அனுப்பியது.

இலங்கை அரசு தரும் பணத்துக்காக இலங்கைக்கு இவர்கள் மேற்கொண்ட திருட்டுப் பயணம் அம்பலமாகிவிட்டதால், அவமானப்பட்டு நிற்கிறார்கள் மனோ உள்ளிட்ட அத்தனை பேரும். இப்போது இழந்துவிட்ட பெயரை எப்படியாவது மீட்க, தங்களுக்குத் தோன்றிய பொய்களை அவிழ்த்து விட்ட வண்ணம் உள்ளனர். இதில் பாடகி சுசித்ரா சொல்லியிருப்பதுதான் உச்சக்கட்ட நகைச்சுவை. இலங்கையில் தேர்தல் நடப்பதே தெரியாது என்றும், பணத்துக்காக இலங்கைக்குப்போகவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் கூறியிருப்பதைப் பாருங்கள்:

'எங்களை விளையாட்டு மைதான பூமி பூஜைக்காக என்று சொல்லித் தான் இலங்கைக்கு அழைத்தனர். அரசியல் தொடர்புள்ள நிகழ்ச்சியா என்று விசாரித்தோம், இல்லை என்றனர். அதன் பிறகு இலங்கை புறப்பட்டுச் சென்றோம்.

கொழும்பு விமான நிலையத்தில் இறங்கியதும் இலங்கை ஜனாதிபதிக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்வதற்கு நாங்கள் வந்திருப்பதாக உள்ளூர் தமிழ் தொலைக்காட்சி சேவையில் செய்தி சொன்னார்கள்.அதை பார்த்ததும் அதிர்ச்சியானோம். அதன் பிறகு தான் அங்கு தேர்தல் நடப்பதே எங்களுக்குத் தெரிந்தது.

மனோ உடனடியாக சென்னைக்குத் தொடர்பு கொண்டு நடிகர் சங்க நிர்வாகிகளிடம் பேசி என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை கேட்டார். அவர்கள் நிகழ்ச்சியை இரத்துச் செய்து விட்டு சென்னை திரும்பும் படி கூறினர். நாங்களும் வந்து விட்டோம். இலங்கைக்கு எங்களை ஏமாற்றி அழைத்து போய் விட்டார்கள்.

உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுடன் உணர்வுபூர்வமாக நான் ஒன்றி இருக்கிறேன். இலங்கையில் தமிழர்கள் பட்ட கஷ்டங்கள் மனதை ரொம்பப் பாதித்தது.இலங்கைக்கு பணத்துக்காக நாங்கள் போகவில்லை. எங்களை அழைத்தவர்களிடம் ஒரு காசு கூட வாங்காமல் திரும்பி விட்டோம் என்று கூறியுள்ளார் சுசித்ரா.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை இலங்கைக்கே போகக் கூடாது என தமிழ் உணர்வாளர்கள் கூறிவரும் நேரத்தில், இனிபல முறையோசித்துவிட்டே இலங்கை செல்வேன் என்று கூறியுள்ளார் மனோ. அவர் கூறுகையில் ; 'நாங்கள் பாடகர்கள் இலங்கையில் தமிழர்கள் உள்ளனர். அவர்களை சந்தோஷப்படுத்தும் நோக்கத்திலேயே அங்கு சென்றேம்.பணத்துக்காக செல்லவில்லை. அதில் அரசியல் இருப்பது தெரிந்ததும் அதிர்ச்சியானோம். இனி இலங்கைக்கு செல்ல பல தடவை யோசிப்போம்' என்றார்.

விளையாட்டரங்க பூமி பூஜைக்கு சென்றோம் என்ற இவர்களின் வாதத்தை ஏற்றாலும் கூட, அது தமிழர் நிகழ்ச்சியல்லவே. இலங்கை அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சி. இலங்கை ஜனாதிபதி கலந்து கொள்கிறார் என்று வேறு அழைப்பிதழ் தந்திருக்கிறார்கள். இதெல்லாம் தெரிந்த பிறகுதானே இவர்கள் திகதி கொடுத்து முற்பணம் வாங்கி கொழும்பு புறப்பட்டார்கள். அதுவும் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக அல்லவா இந்தப் பயணத்தை செய்திருக்கிறார்கள்.

'இப்போ நாம இலங்கைக்கு போறது மட்டும் தெரிஞ்சா, கறுப்புக் கொடியோட சீமான் எதிர்ல வந்து நிப்பாரு' என்று விமான நிலையத்தில் இவர்கள் கூறி சிரித்துள்ளனர். ஆகவே,தெரியாமல் போய்விட்டோம் என்பதோ, ஏமாத்தி கூட்டிட்டுப் போயிட்டாங்க என இவர்கள் கூறுவதோ உண்மையல்ல.

இலங்கை அரசின் நிகழ்ச்சி இது எனத் தெரிந்தே இவர்கள் பயணம் மேற்கொண்டனர். அதற்கு ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இப்போது கையும் களவுமாக மாட்டிக் கொண்டதும் ஆயிரம் பொய்க்காரணங்களை அடுக்க ஆரம்பித்துள்ளனர் என்கிறார் தமிழ் உணர்வாளரான ஒரு நடிகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வரைபடத்திலிருந்து மறையப்போகும் 'அகத்தித் தீவு'



புவிவெப்பமடைதல் உலகளாவிய ரீதியில் பல்வேறு சூழற்பிரச்சினைகளை ஏற்படுத்தி வருவதுடன் சில பிராந்தியங்களின் நிலைத்திருப்புக்கு சவாலாகவும் காணப்படுகின்றது. சூழற்சமநிலையை சீர்குலைக்கும் பிரதான காரணியான வெப்பநிலை அதிகரிப்பால் இன்று வரட்சி, பருவம் மாறிய மழைவீழ்ச்சி, காட்டுத் தீ எனப் பல்வேறு சூழற்பேரிடர்கள் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வருகின்றதை அவதானிக்க முடிகிறது.

அந்த வகையில் இந்து சமுத்திரத்திலுள்ள அழகிய தீவுகளும் சுற்றுலா மையமுமான அகத்தித் தீவுகள், காலநிலை மாற்றத்தினால் மிக மோசமான பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளதுடன் விரைவில் உலக வரைபடத்திலிருந்து காணாமல் போகும் அபாயத்தின் எதிர்நோக்கியுள்ளன.

இந்து சமுத்திரத்தில் அராபிக்கடலில் இந்தியாவின் வடமேல் கரையில் இத்தீவுகள் அமைந்துள்ளன. குறிப்பாக கேரளக்கடற்கரையிலிருந்து 200-300 கிலோமீற்றர்களுக்கு அப்பால் அமைந்துள்ள இலட்சத் தீவுகளில் ஒன்றாக இந்த அகத்தித் தீவு உள்ளது.

முருகைப்பல்லடியங்களினால் உருவாக்கப்பட்ட முருகைக்கற் தொடர்கள் மற்றும் பவளப்பாறைகள், ஆழமற்ற சிறு கடனீரேரிகள் என்பவற்றால் சூழப்பட்ட அகத்தித் தீவிற்கு வெளிநாட்டு சுற்றுப்பயணிகளே அதிகளவில் செல்கின்றனர்.

மேலும் அகத்தி தீவானது சிறந்ததோர் உயிர்ப்பல் வகைமையைக் கொண்டமைந்த பகுதியாகும். இங்கு கண்டல் தாவரங்கள், சிறுகாடுகள் காணப்படுவதுடன் உலகின் அரியதாகவும் அருகிச் செல்வதாகவும் கருதப்படும் பல உயிரினங்கள் இங்கு காணப்படுகின்றன.

பவளப் பாறைகள் மற்றும் முருகைப் பாறைகளினாலான இத்தீவின் இயற்கை அமைவிடமானது பல உயிரினங்களுக்கு பாதுகாப்பு வாழ்விடத்தை அளித்து வருகின்றது. இங்கு 700 இற்கும் மேற்பட்ட மீன் வகைகள், 150 வகையான பவளப் பாறை வகைகள், 12 கடல் பாலூட்டி வகைகள், 20 வகையான ஊர்வன, 95 வகையான பறவைகள், 200 வகையான தாழ்நில உயிரினங்கள் 95 வகையான கடல் அல்காக்கள், 200 வகையான நட்சத்திர மீன்கள், 600 வகையான நத்தைகள் மற்றும் ஷெல் மீன்கள் போன்றனவும் பச்சை ஆமைகள் போன்றனவும் அகத்தித் தீவில் காணப்படுகின்றன.

சிறப்பான உயிர்ப்பல்வகைமையைக் கொண்ட இத்தீவானது அண்மைக்காலமாக பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. குறிப்பாக அகத்தித் தீவின் சனத்தொகை அதிகரிப்பானது அங்கு பல்வேறு விதமான சூழற்பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன.



புவிவெப்பநிலை அதிகரிப்பினால் துருவப் பகுதியிலுள்ள பனிப்படலங்கள் விரைவாக உருகி கடலினுள் கலக்கின்றன. இதனால் உலகளாவிய ரீதியில் சமுத்திர நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து செல்வதால் பல தீவுகள் கடலினுள் மூழ்கும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளன. அவ்வாறே அகத்தித் தீவினைச் சூழவுள்ள கடற்பரப்பின் நீர்மட்டம் அதிகரித்துச் செல்வதால் அது விரைவில் கடலினுள் மூழ்கும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளது.

அத்துடன் தற்போது உலகளாவிய ரீதியில் காலநிலை குழப்பங்களைத் தோற்றுவித்துவரும் எல்-நினோ பருவ மாற்றத்தினால் அகத்தித் தீவு மிக மோசமாக பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளது. 1998 இல் ஏற்பட்ட எல்-நினோ காலநிலை மாற்றத்தால் இத்தீவின் பல பகுதிகளிலும் மோசமான பாதிப்புகள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இங்கு சுற்றுலா கைத்தொழில் வருமானத்தை ஈட்டித்தரும் பிரதான காரணியாக இருப்பதால் அகத்தி தீவினைச் சூழவுள்ள ஆழமற்ற கடனீரேரிகள் மற்றும் ஆழ்கடற்பரப்புகள் என்பன மிக மோசமான மாசடைவுக்கு உள்ளாகி வருகின்றன.

அகத்தித் தீவினை கடலரிப்பிலிருந்து பாதுகாக்கும் பிரதான அரணாக உள்ள பவளப்பாறைகள் மற்றும் முருகைக் கற்பாறைகள் என்பன சீமெந்து தயாரித்தல் மற்றும் ஏனைய தேவைகளுக்காக அங்குள்ளவர்களால் அகழப்பட்டு வருவதனால் கடலலைகளின் தாக்கம் அங்கு அதிகரித்துக் காணப்படுவதுடன், படிப்படியாக நிலத்தினை கடல் தின்று வருகின்றது.

அத்தோடு புதிய கட்டிடங்களை அமைப்பதற்காக கடற்கரை மணல் அள்ளப்படுவதனால் விரைவாக கடல்நீர் நிலத்தினை மூடிவருகின்றது.

மீன்பிடிப்பதற்காக பயன்படுத்தப்படும் முறைகளும் புதிய சூழற்பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக ரியுனா போன்ற மீன் வகைகள் இங்கு அதிகமாகக் காணப்படுவதால் அவற்றைப் பிடிப்பதற்காக பயன்படுத்தப்படும் சிறிய கப்பல்களின் கழிவுகள் கடலை மாசுபடுத்துகின்றன. அத்தோடு சிலவேளைகளில் மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் டைனமற் வெடிகள் அதிகளவான மீனினங்கள் அழி வதற்குக் காரணமாக அமைகின்றன.

மேலும் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் வாயுவின் அதிகரிப்பானது கடல் நீரின் அமிலத்தன்மையை அதிகரித்துள்ளதனால் கடல்வாழ் உயிரினங்களின் வாழ்வியற் கோலத்தில் பாரியளவிலான பாதிப்புகள் ஏற்பட்டு வருவதுடன், தீவின் பாதுகாப்பு அரணாகவுள்ள பவளப்பாறைகளின் அழிவுக்கும் காரணமாக உள்ளது.

எனவே இவற்றை கருத்திற்கொண்டு அகத்தித் தீவின் நிலைத்திருப்பினை உறுதிசெய்யவும் உயிர் பல்வகைமையைப் பேணவும் மும்பை தேசிய வரலாற்று அமைப்பு, இந்திய சூழல் பாதுகாப்பு அமையம், அகத்தி பாதுகாப்பு அமையம் போன்றன பல்வேறு சூழல் காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. 2008 ஆம் ஆண்டு முதல் கடற்கரை பாதுகாப்பு இயக்கம் அங்கு ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன் புதிய பாதுகாப்புச் சட்டங்களையும் ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

த.கஜலக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக்குறியாகும் உயர்கல்வி

தெற்காசியாவிலே, படிப்பறிவு வீதமும் வாசிப்புத்திறன் வீதமும் கூடிய நாடாக இலங்கை காணப்பட்ட போதிலும் வருடாந்தம் மாணவர்கள் உயர்கல்வியை முன்னெடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில், பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இலங்கை காணப்பட்ட போதிலும் சுதந்திரமடைந்த நாள்முதலே எமது நாட்டில் இலவசக் கல்வி முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது. இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படும் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அன்றுமுதல் நாட்டில் பாலர் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்விமுறை அமுல்படுத்தப்படுகிறது.

வசதி இல்லை என்ற காரணத்திற்காக எந்தவொரு மாணவனும் கற்றலை நிறுத்தக் கூடாது என்ற காரணத்தாலேயே இலவசக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இது தவிர கல்வியறிவை ஊக்குவிப்பதற்காக பல்வேறு புலமைப்பரிசில்களும் வழங்கப்படுகின்றன.

இது இவ்வாறிருக்க, தற்போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது விரிவுரைகளை இடைநிறுத்தியுள்ளதாலும் பல்கலைக்கழகங்களில் நிலவும் பலவகையான பிரச்சினைகளாலும் மாணவர்களுக்கு உரிய காலத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்ய முடியாதுள்ளதுடன், பெருமளவான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததும் உயர்கல்வியை மேற்கொள்ளாமலும் இருக்கின்றனர்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்திலிருந்து வெளிவாரி பட்டப்படிப்புக்கான பதிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் வருடாந்தம் 60 ஆயிரம் மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பினை இழப்பதாக வெளிவாரி பட்டப்படிப்பு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மத்திய நிலையத்தின் ஏற்பாட்டாளர் கே.பி.சோமசிறி கூறினார்.

**வருடாந்தம் குறைந்தபட்சம் 60 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான இஸட் புள்ளிகளைப் பெறத் தவறுவதாகவும் உயர்கல்வி அமைச்சரினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் முரண்பாடான அறிக்கைகள் காரணமாக நாடெங்குமுள்ள பல்கலைக் கழகங்களில் வெளிவாரி பட்டப்படிப்பின் முறைமையின் ஸ்திரத்தன்மை நிச்சயமில்லாதுள்ளதெனவும் அவர் மேலும் கூறினார்.**

இந்த வருடமும் உயர்தரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 2,95,600 பேர் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். ஒவ்வொரு வருடமும் பெரும்பாலான மாணவர்கள் உயர்தரப் பரீட்சை எழுதுகின்ற போதிலும் சுமார் 25 ஆயிரத்திற்குட்பட்ட மாணவர்களுக்கே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்றது. பல்கலைக் கழக அனுமதிக்குத் தேவையான புள்ளிகளைப் பெற்றிருந்த போதிலும் வருடாந்தம் குறிப்பிட்டளவு மாணவர்கள் உள்வாங்கப்படுவதால் ஏனையோர் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் உயர்கல்வி கற்கைநெறிகளை வெளிவாரியாக கற்கின்ற போதும் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இது தொடர்பாக 'வெளிவாரி முதற்கலைத் தேர்வு' *(G.A.Q.)* மாணவியொருவர் கூறுகையில்; நான் 2007 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சை எழுதினேன். பல்கலைக்கழகத்திற்குத் தேவையான வெட்டுப்புள்ளி இல்லாமையினால், வெளிவாரியாக வெளிவாரிப் பரீட்சைக்கான பாடங்களை தனியார் வகுப்புகளில் கற்கிறேன்.

*G.A.Q.* பாடத்திற்கான பரீட்சை எழுதி இரண்டு வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இன்னும் கலைமாணிக்கான *(B.A.)* பரீட்சை நடைபெறவில்லை. மூன்று வருடங்களாக கலைமாணிப் பாடத்திட்டங்களைப் படிக்கின்றோம். பரீட்சைக்குத் தேவையான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, தேவையான பணத்தையும் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தியுள்ளோம். குறிப்பிட்ட காலத்திற்குள் நடக்க வேண்டிய பரீட்சைகள் நடைபெறாமலிருப்பதால் தொழில்களைப் பெறுவதில் காலம் செல்வதாகவும் விரிவுரையாளர்களின் கவனயீனம், ஆர்ப்பாட்டங்கள், உயர் கல்வியமைச்சின் முறையான திட்டமிடலின்மையே எமது எதிர்காலத்தைப் பாதிக்கின்றன' என்றார்.



இது எவ்வாறிருப்பினும் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான எமது மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைக் கல்வியில் சிறந்த பெறுபேறுகளையும் தொழில்நுட்ப அறிவையும் விருத்தி செய்து கொள்வதற்காக மாணவர்களுக்கு கல்வியமைச்சு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இருந்த போதிலும் பாடசாலைக் கல்வியின் போது மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள், ஊக்கங்களை அவர்களது உயர்கல்வியில் வழங்க அதிகாரிகள் முன்வருவதில்லை. பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர்களின் எண்ணிக்கையை உயர்கல்வியமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கட்டுப்படுத்தியுள்ளதால் உயர்கல்வியைக் கற்க முடியாமல் பலர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பல்கலைக்கழக அனுமதிகளை வெளிநாட்டவர்களுக்கு விற்பதனாலும் வருடாந்தம் பல்கலைக்கழகத்திற்கான அனுமதி மிகவும் குறைவான தொகையாகக் காணப்படுவதனாலும் எமது நாட்டு மாணவர் சமுதாயத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது.

இதேவேளை, பல்வேறு துறைகளில் தமது பிள்ளைகள் சாதனை படைக்க வேண்டும் என்ற கனவுடன் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்து உயர்கல்வித் துறையில் காலடி வைக்க முடியாத நிலையில் உயர்கல்வி நிலையங்களில் கட்டுப்பாடுகள் நிலவுவதாகவும் பிள்ளைகள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக உருவாகவுள்ள மாணவர் சமுதாயத்திற்கு நிலவும் இந்நிலையினைத் தடுக்க விரிவுரையாளர்களுக்கு போதிய சம்பளங்களை வழங்கி, காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதுடன், வெளிநாட்டு மாணவர்களுக்கு வெற்றிடங்களை வழங்கி, எமது மாணவர்களின் பல்கலைக் கழக சந்தர்ப்பங்களை இழக்கச் செய்வதையும் தடுக்க வேண்டும். **அத்துடன் உயர்கல்வித் துறையை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை எதிர்கால நலன்கருதி காத்திரமான முறையில் முன்னெடுக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவம்

# நோயின் எதிரி செக்ஸ்



ஆங்கிலத்தில் அப்பிள் பழத்தின் மகிமையைப் பற்றி சொல்வதற்காக ‘*An apple a day keeps the doctor away*’ (தினமும் ஒரு அப்பிள் சாப்பிட்டால் டாக்டரிடம் செல்ல வேண்டாம்) என்ற ஒரு பழமொழி வெகு பிரசித்தம் அதே மாதிரிதான் *(Have sex everyday to keep diseases away)* தினந்தோறும் செக்ஸ் வைத்துக் கொண்டால் நோய் அண்டாது என்று மருத்துவர்கள் தற்போது சொல்லத் தொடங்கி உள்ளனர்.

நாள்தோறும் அல்லது அடிக்கடி செக்ஸ் என்பது உங்களது மனதிற்கும் உடலுக்கும் இன்பத்தையும் உற்சாகத்தையும் தருவதோடு மட்டுமல்லாது கலோரிகளை எரித்து கொழுப்பை குறைக்கிறது.மன அழுத்தத்திலிருந்து விடுபட வைக்கிறது என அதன் பயனை ஏராளமாக சொல்லிக் கொண்டே போகலாம் என்கிறார்கள் பாலியல் மருத்துவ நிபுணர்கள்.

அவர்கள் பட்டியலிடும் அவ்வாறான பயன்கள் சில வருமாறு;

ஒரு வாரத்தில் இரண்டு தடவைகளுக்கும் அதிகமாக செக்ஸ் வைத்துக் கொள்ளும் ஆண்களுக்கு மாதம் ஒரு முறை செக்ஸ் வைத்துக் கொள்ளும் ஆண்களை விட மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு மிக மிக குறைவு என்று சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

அடிக்கடி பாலியல் உறவு வைத்துக்கொள்ளும் தம்பதியர்களுக்கு வழக்கமாக ஏற்படும் ஜலதோஷம், காய்ச்சல் போன்ற நோய்கள் தாக்காதவாறு *immunoglobulin A* என்ற நோய் எதிர்ப்புச் சக்தி அவர்களது உடலில் அதிகரிக்கிறது.

பலருக்கு அலுவலகப் பிரச்சினை அல்லது குடும்பப் பிரச்சினை என்று ஏதாவது ஒரு பிரச்சினை வாட்டிக் கொண்டிருக்கும்.இதனால் அவர்கள் அத்தகைய சமயங்களில் மிகுந்த மன அழுத்தத்துடனேயே காணப்படுவார்கள்.இதனால் கோபப்படுவது அருகில் இருப்பவர்களிடம் எரிந்து விழுவது என இவர்கள் தாமும் துன்பப்பட்டு மற்றவர்களையும் மன வேதனைக்கு ஆளாக்குவார்கள்.

சில சமயங்களில் இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் அது மன நல வியாதிக்கே கூட கொண்டுசென்று விடும். இத்தகைய நபர்கள் படுக்கை அறையினுள் நுழையும் முன்னர் பிரச்சினைகளையும் வெளியிலேயே விட்டுவிட்டு தமது ஜோடியுடன் அடிக்கடி ஆரோக்கியமான செக்ஸ் வைத்துக் கொள்ளும் பட்சத்தில் மன அழுத்தம் அடியோடு குறைவதோடு பிரச்சினைகளுக்கான தீர்வை யோசிக்கவும் மகிழ்ச்சியுடன் வாழவும் முடியும் என்று அடித்துக் கூறுகின்றனர் இத்துறையின் மருத்துவ நிபுணர்கள்.

**வலிகளிலிருந்தும் நிவாரணம்**

சிலருக்கு சமயங்களில் தலைவலி மண்டையைப் பிளக்கும்.இத்தகைய நபர்களிடம் அவர்களது இணை செக்ஸ் வைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் அணுகினால் போப்பா! எனக்கே தலைவலி மண்டையைப் பிளக்குது. இதுல இது ஒண்ணுதான் குறைச்சல்..! என்று எரிந்து விழுவார்கள். ஆனால் செக்ஸ் வைத்துக் கொள்வதை தவிர்க்க தலைவலியை ஒரு காரணமாகச் சொல்லாதீர்கள் என்று கூறுகின்றனர் இத்துறை மருத்துவ நிபுணர்கள்.

தலைவலி இருக்கும்போது செக்ஸை தவிர்ப்பதற்குப் பதிலாக அதனை வைத்துக் கொண்டால் அப்போது ஏற்படும் உச்சக்கட்டம் எனப்படும் ‘ஆர்கஸம்’ (*Orgasm*) உங்களது தலைவலியை விரட்டியடித்து விடும் என்கிறார்கள்.அதாவது ஆர்கஸத்தின்போது ஹோர்மோன் ஆக்ஸ்டாசினின் அளவு ஐந்து மடங்கு அதிகரிக்கும் என்றும் இது வலிகளைக் குறைக்கும் என்றும் மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

ஒருவருக்கு செக்ஸ் வைத்துக் கொள்ளும்போது ஏற்படும் ஆர்கஸத்தின் போது ‘ஈஹுடதூஞ்ஹூணி ஹுணீடிச்ணஞ்ஹூணிண் ஞுஹுஹூணிணஹு’ என்று அழைக்கப்படும் ஹோர்மோன் சுக்கிறது.இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதோடு, உடல் திசுகள் கோளாறை சரி செய்து தோலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்கிறது. வாரத்திற்கு இரண்டு முறையாவது ஆர்கஸம் உணர்வை எட்டும் ஆண்கள் சில வாரங்களுக்கு ஒரு முறை மட்டும் அதனை அனுபவிக்கும் ஆண்களைக் காட்டிலும் கூடுதல் ஆயுளைப் பெறுகிறார்கள்.

நீங்கள் செக்ஸ் வைத்துக் கொள்ளும்போது உங்களது இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. உங்களது உடல் உறுப்புகள் மற்றும் உயிரணுக்களுக்கு புதிய இரத்தம் பாய்ச்சப்படுகிறது.பயன்படுத்தப்பட்ட இரத்தம் வெளியேற்றப்படும்போது உங்களது உடல் நச்சுப்பொருட்கள் மற்றும் இதர பொருட்களை வெளியேற்றுகிறது. இதனால் தான் செக்ஸ்க்கு பின்னர் உங்களது உடல், சோர்வடைவதாக நீங்கள் உணர்கிறீர்கள்.

செக்ஸ்க்கு பின்னர் உடல் சோர்வடையும் போது தூக்கம் தானாகவே கண்களை தழுவும்.சிலர் தூக்கத்திற்காக மாத்திரை, மருந்துகளையெல்லாம் நாடுவார்கள். அவற்றையெல்லாம் தூக்கி தூர எறிந்துவிட்டு, ஆரோக்கியமான செக்ஸ் வைத்துக் கொண்டாலே தூக்கம் சொக்கும்.இவ்வாறு நன்றாகத் தூங்கி எழுவதன் மூலம் உங்களது உடல் மனது ஆகிய இரண்டுமே புத்துணர்ச்சி பெற்று அடுத்த நாள் பணியை நீங்கள் சுறுசுறுப்பாக ஆற்ற வைக்கும்.

பலர் தங்களது உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள வீட்டிலோ அல்லது உடற்பயிற்சி கூடத்திலோ பல உடற்பயிற்சிகளை செய்வது வழக்கம். உடல் கட்டுக்கோப்புக்கு இது வழி முறை என்றாலும் மாற்று வழி ஒன்றும் உள்ளது. அதுதான் அடிக்கடி செக்ஸ் வைத்துக்கொள்வது.அரைமணி நேரம் செக்ஸ் வைத்துக் கொள்ளும்போது உடலில் 80 க்கும் அதிகமான கலோரிகள் எரிக்கப்படுகின்றனவாம். எனவே அடிக்கடி வைத்துக் கொள்வதும் கட்டுடலுக்கு ஒரு மாற்று வழி என்கிறார்கள் இத்துறை நிபுணர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முடி' சூடும் மன்னர்கள்









பெண்களைப் பொறுத்தவரை முன்பெல்லாம் நீண்ட தலைமுடியுடன் திகழ்வதையே அதிகம் விரும்புவார்கள். காலப்போக்கில் பொப் உள்ளிட்ட பல்வேறு கட்டிங்குகள் வந்துவிட்டன.

பெண்கள்தான் தலையலங்காரத்திலும் தலைமுடிப் பராமரிப்பிலும் அ திக ஆர்வம் காட்டுவார்கள் என்பது பொதுவான கருத்து. அதில் பாதி உண்மையும் கூட. அதேசமயம்,தற்போதைய இளைஞர்களும் கூட தலைமுடியில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

அழகிய,ஸ்டைலான, சற்றே நீளமான தலைமுடியைப் பல்வேறு ஆண்களும் கூட விரும்புகிறார்கள். அதாவது ஒவ்வொரு பிரபலங்களினதும் ஸ்டைலில் முடி வளர்ப்பதில் பலருக்கும் ஆர்வம் அதிகமாகவே உள்ளது.

தலைமுடிப் பராமரிப்பு,தலைமுடியை நன்றாக வைத்துக் கொள்வது குறித்து சில டிப்ஸ்களை கீழே பார்க்கலாம்.

முதலில் நமது தலைமுடியின் தன்மையை அறிந்துகொள்ள வேண்டும். அதாவது நமது முடி அலை அலையாக இருக்கிறதா அல்லது சுருள் சுருளாக இருக்கிறதா அல்லது வளைந்து நெளிந்து இருக்கிறதா அல்லது கோரையாக இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அதற்கேற்றால் போல் நாம் பராமரிப்பை மேற்கொள்ள முடியும்.

இயற்கையான எண்ணெய் வகைகள் நமது தலைமுடியை வலுப்படுத்தும். எனவே, அடிக்கடி நமது தலைமுடியை தண்ணீரால் கழுவக்கூடாது. அதற்குப் பதிலாக நமது முடியின் மிருதுவான தன்மைக்கு ஏற்றவாறு நல்ல ஷாம்புகளைப் பயன்படுத்தலாம். பின் இயற்கை முறையிலோ அல்லது நல்ல டர்க்கி துண்டைக் கொண்டோ தலையை நன்றாகக் காய வைக்க வேண்டும்.

ஈரம் காய்வதற்கு முன்பாக தலைவாரினால் அதிகமாக முடி கொட்டிவிடும். எனவே, தலை நன்றாகக் காய்ந்த பிறகுதான் வார வேண்டும். தலைமுடியில் தூசு இருந்தால் விரல்களைக் கொண்டு மிருதுவாக எடுக்க வேண்டும்.

ஒரு சில நேரங்களில் நமது தலைமுடி வறட்சியாகக் காணப்படும். அப்போது நல்ல சலூனுக்குச் சென்று ட்ரிம் செய்யலாம். அப்போது நமது முடி அழகாக மாறும்.

நீளமான முடியை வளர்க்க விரும்பும் ஆண்கள் முறையான உணவுப் பழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்.உணவில் நிறைய விற்றமின் சத்துகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஃப்ளானல் தலையணைகள் நமது தலைமுடியை விரைவில் உலர்த்திவிடும். எனவே அவற்றை நாம் பயன்படுத்தக்கூடாது.

குறிப்பிட்ட இடைவெளியில் ஹேர் ஸ்பா செய்ய வேண்டும். அது நமது தலைமுடியை மினுமினுப்பாக வைத்திருக்கும்.

பொதுவாகத் தலைமுடி 30 நாட்களுக்கு அரை இஞ்ச் அளவிற்குத்தான் வளரும். எனவே, சலூரன் போய் வந்தவுடன் முடி நீளமாக வளர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கக் கூடாது. மிகவும் பொறுமையாக உரிய முறையில் தலைமுடியைப் பராமரித்து வந்தால் தலைமுடி நன்றாக இருக்கும்.




# இறுதி யாத்திரை மெதுவாக நகர்வது ஏன்?

துர்த்தேவதைகளைத் துரத்தவும் இறந்தவர்களுக்கு சொர்க்கம் செல்ல வழிகாட்டவும் இறுதி யாத்திரையின்போது மெழுகுவர்த்திகளையும் தீப்பந்தங் களையும் ஏற்றும் வழக்கத்தை ரோமாபுரி மக்கள் கொண்டுவந்தனர். தீப்பந்தம் என்ற பொருள் உடைய லத்தீன் சொல்லில் இருந்து இறுதிச் சடங்கு என்ப தைக் குறிக்கும் *Funeral* என்ற ஆங்கில வார்த்தை தோன்றியது. 15ஆம் நூற்றாண்டில் பல கிளைகளையுடைய தாங்கியில் *Candelabras* மெழுகு வர்த்திகளை ஏற்றிச் சவப்பெட்டி மீது வைத்து இடுகாட்டுக்கு எடுத்துச் செல லத் தொடங்கினார்கள். மெழுகுவர்த்தி அணையாமல் இருப்பதற்கு இறுதி யாத்திரை மெதுவாகச் செல்லும், அது அப்படியே வழக்கமாகிப்போனது.

## அக்பரின் புதுமையான சதுரங்கம்



சதுரங்கம் மிகவும் பழைமையான விளையாட்டு. இந்தியாவில் தோன்றிய சதுரங்கம் எனப்படும் செஸ், பெர்சியா, கிரேக்க நாடுகள் வழியாக 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பே மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றது. இந்தச் சதுரங்க விளையாட்டை பேரரசர் அக்பர், பளிங்குத் தரையில் உண்மையான நடனமாடும் பெண்களைக் கொண்டு விளையாடியதாகக் கூறப்படுகிறது. அக்பர் சிம்மாசனத்தில் அமர்ந்தபடியே பெண்களை ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கு நகரச் செய்வார்கள். அந்த நடனப் பெண்களும் நடன அசைவுகளோடு ஒரு கட்டத்தில் இருந்து இன்னொரு கட்டத்துக்கு மாறுவார்கள்.

## 'பிளாக்மெயில்' வார்த்தை பிறந்த விதம்

ஸ்கொட்லாந்து சொல்லான 'மெயில்' என்பதற்கு வாடகை அல்லது வரி என்று பொருள். முதலாம் ஜேம்ஸ் அரசர் காலத்தில் வரிகள் வெள்ளி நாணயங்களில் செலுத்தப்பட்டன. அதை வையிட்மெயில் என்று கூற லாம். 16, 17 ஆம் நூற்றாண்டுகளில், ஸ்கொட்லாந்து எல்லைகளில் விவ சாயிகளுக்கு ஆபத்து நேரக்கூடாது என்றால் பணம் கொடுக்க வேண்டும் என்று கொள்ளையர்கள் பயமுறுத்திப் பணம் கேட்டனர். கறுப்பு என்பது தீயதைக் குறிக்கும். இவ்வாறு கொடுமையாக வரி வசூலிப்பது, 'கறுப்பு வரி' அல்லது 'பிளாக்மெயில்' என்று அழைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

## இரகசிய வாழ்க்கை

அவள் சுமாரான அழகு. நல்ல வேலையில் இருக்கிறாள். பெற்றோர் அவளுக்கு மாப்பிள்ளை தேடினார்கள். சொல்லிக் கொள்ளும் படியான பெரிய வேலை ஒன்றும் இல்லை என்றாலும், ஆள் பார்க்க சினிமா நடிகர் சாயலில் இருந்தார். 'அழகான மாப்பிள்ளை கிடைத்தார்' என்று பெற்றோர் மகிழ்ந்து,திருமணம் செய்துவைத்தார்கள்.அவள் தாயானாள். பெண் குழந்தை பிறந்தது.

குழந்தை பிறந்த இரண்டொரு வருடங்களிலே கணவன்–மனைவி இடையே மனக் கசப்பு உருவானது. அழகான கணவருக்கு இன்னொரு பெண்ணோடு தொடர்பு இருப்பதாக நம்பினாள்.அவளது பெற்றோரும் அவளுடன் சேர்ந்து கொண்டு,பிரச்சினையை விஸ்வரூபமாக்கி விட்டார்கள்.அவள் விவகாரத்து செய்துவிடலாம் என்று கூற அதற்கும் பெற்றோர் ஆமாம் போட்டார்கள்.விவாகரத்தும் நடந்து விட்டது. இப்போது அவளுக்கு 35 வயது. குழந்தைக்கு 6 வயது.

விவாகரத்தாகி நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. பெற்றோர் மறுமணம் செய்துகொள்ள வற்புறுத்தியதால் அவளும் சம்மதித்தாள் .சில மாப்பிள்ளைகள் வந்தார்கள்.அவளைப் பார்த்தார்கள் பேசினார்கள். அவர்கள் கேட்ட கேள்விகளும்,அவர்களின் எதிர்பார்ப்புகளும் அவளுக்குள் மிகுந்த எரிச்சலை ஏற்படுத்தியது.பெண் பார்க்க வந்த பெரும்பாலான ஆண்களின் எதிர்பார்ப்புகளும் கேள்விகளும் ஒரே மாதிரி இருந்ததால் அவளுக்கு பயம் வந்துவிட்டது. இவர்களில் யாரை மறுமணம் செய்தாலும் பழைய கதையாகி மீண்டும் விவாகரத்துச் செய்ய வேண்டியது வந்துவிடும்! என்று பயந்து மறுமண ஆலோசனைக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

'இனித் தனக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டியதில்லை' என்று அவள் கூறி ஆறு மாதங்கள் ஆன நிலையில் பெற்றோரின் காதுகளுக்கு அந்தச் செய்தி கிடைத்தது. அவர்கள் அதிர்ந்து போனார்கள். வருடம் 8 இலட்சம் ரூபா சம்பளம் வாங்கி தங்களை நல்லபடியாக கவனித்துக் கொள்ளும் மகளிடம் அதுபற்றி கேட்கலாமா? வேண்டாமா? என்று ரொம்ப யோசித்து நாலைந்து கோவில்களுக்கும் போய் சாமி கும்பிட்டுவிட்டு? பயத்தோடு மகளிடம் ஆரம்பித்தார்கள்.உனக்கும் உன்னோடு வேலை பார்க்கும் அந்தப் பெரிய மனுஷனுக்கும் தொடர்பாமே... இரண்டு பேரும் மாதத்தில் ஒரு தடவை வெளி நகரத்துக்குச் சென்று வருவது அலுவல் ரீதியாக இல்லையாமே... என்று கேட்டார்கள்.

அவளை விட அந்த நபருக்கு 25 வயது அதிகம். அதனால் தான் அவரை 'பெரிய' மனுஷன் என்று சுட்டிக் காட்டினார்கள்.

'ஆமாம் உண்மைதான். ஆறு மாதங்களாக அப்படித்தான் வெளியூர் வாழ்க்கை' நடத்தி வருகிறோம். வேறு நான் என்ன செய்ய முடியும்? என்னை யார் வந்து பெண் பார்த்தாலும் ஏன் விவாகரத்து நடந்தது? உங்கள் மீது என்ன குறை? என்று கேட்கிறார்கள். என்னை சந்தேகத்தோடு பார்க்கிறார்கள். எனக்கு எவ்வளவு சேமிப்பு இருக்கிறது என்று கேட்கிறார்கள்.மகளுக்கு என்னையே பிடிக்கவில்லை. அவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறாள். இடையில் வாழ்க்கையில் சேரும் இன்னொரு நபரை அவள் எப்படி ஏற்றுக் கொள்வாள்? எனக்கு சம வயது ஆண் தேவையில்லை. 25 வயது கூடுதலாக உள்ளவரே போதும்.என் வாழ்க்கை இப்போது மகிழ்ச்சியாக போய்க் கொண்டிருக்கிறது. என்னை நிம்மதியாக வாழவிடுங்கள் என்றாள்.

பெற்றோர் அதோடு நிறுத்தாமல் அவருக்கு திருமண வயதில் பெண் இருக்கிறாள். நியாயம்...தர்மம்... என்று ஆரம்பிக்க நியாயம்... தர்மம் ஒழுக்கம் பற்றிப் பேசும் நீங்கள் நான் முதல் கணவரை விவாகரத்து செய்ய விரும்பிய போது ஆமா... ஆமா என்று ஏன் ஜால்ரா அடித்தீர்கள்? விவாகரத்து செய்தால் மறுமணத்தில் இன்னென்ன பிரச்சினைகள் இருக்கும் என்று நீங்கள் எடுத்துச் சொல்லி என்னை யோசிக்கவைத்து, விவாகரத்தை தடுத்திருக்கலாமே...! இன்னொருத்தரை திருமணம் செய்து கொண்டு அவரோடு போராடுவதை விட இந்த வாழ்க்கையே எனக்கு சிறந்ததாக இருக்கிறது. இதில் தலையிடாதீர்கள். உங்கள் வேலையைப் பாருங்கள்.. என்று உச்சியில் அடித்தது போல் சொல்லிவிட்டாள்.

விவாகரத்தான பெண்களில் சிலர் முதிய வயதினருக்கு இரண்டாந் தாரம் ஆகி இப்படிப்பட்ட இரகசிய வாழ்க்கை வாழும் 'விசித்திர பக்குவ நிலைக்கு' வந்துவிட்டார்கள். அதனால் பெற்றோர்களே திருமணமான உங்கள் மகள் விவாகரத்து பற்றி பேசினால், உடனே அதற்கு ஓ.கே. சொல்லிவிடாதீர்கள். இப்படியும் நடந்து விடக்கூடும் என்று கூறி நன்றாக நான்கு விதமாகவும் யோசிக்கச் சொல்லுங்கள்...!

## சந்தோஷத்திற்காக ஒரு சட்டமூலம்

உலகில் மக்கள் எப்படியெல்லாம் சந்தோஷப்படுகிறார்கள்!சில நாடுகளில் ஒருவர் மீது ஒருவர் தக்காளியை வீசிக்கொண்டு சந்தோஷப்படுகிறார்கள்.இன்னும் சில நாடுகளில் சேற்றில் விழுந்து புரள்கிறார்கள்.இதையெல்லாம் ஏதோ ஓரிருவர் நகைச்சுவையாக செய்து கொள்கிறார்கள் என்று எண்ணக்கூடாது.பல்லாயிரம் பேர் ஒன்றாகக்கூடி ஒரு திருவிழா போல இதைக் கொண்டாடுகிறார்கள்.இதற்கெல்லாம் ஒரு ரசனை வேண்டும்.

இந்த மாதிரியான சந்தோஷக் கொண்டாட்டங்களில் இன்றைய திகதியில் பிரேஸில் காரர்களை அடித்துக்கொள்ள உலகத்தில் ஆளில்லை.

அவர்களுக்கு எதற்கெடுத்தாலும் கொண்டாட்டம்தான்.அதிலும் ஆண்டுதோறும் ரியோ நகரில் ஒரு கார்னவேல் நடத்துவார்கள் பாருங்கள்.... அடேயப்பா!உலகிலேயே அந்த கார்னிவேல்தான் பிரமாண்டமான கொண்டாட்டம் என்கிறார்கள்.



பல்லாயிரக்கணக்கானவர்கள் வீதிகளில் அரைநிர்வாணமாக ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் நூறு சதவீதம் சந்தோஷமாக கொண்டாடுகிறார்கள்.

இப்போது பிரேஸில் இன்னும் ஒருபடி மேலே போய் 'மக்கள் ஜாலியாக இருப்பதற்கு உரிமை உண்டு என்பதை நாட்டின் அரசியல் சட்டத்திலேயே ஒரு ஷரத்தாகச் சேர்க்கப் போகிறது.அதற்கான சட்டமூலம் தயாராகிவிட்டது.பாராளுமன்றத்தில் நிறைவேறியவுடன் சட்டமாகிவிடும்.

ஜப்பான் தென்கொரியாவில் 'சந்தோஷ உரிமை' அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

'அட நீங்கள்தான் எதையும் சந்தோஷமாகக் கொண்டாடுவதில் சூரர்கள் ஆயிற்றே. உங்களுக்கு எதற்காக தனியாக ஒரு சட்ட உரிமை?' என்று கேட்டால், 'சட்டபூர்வ உரிமை என்று ஒன்றை அனுபவிப்பது தனிச் சுகம் தெரியுமோ?' என்கிறார்கள் பிரேஸிலியர்கள்.

இன்னும் ஒரு மாதத்தில் பிரேஸில் நாட்டில் கார்னிவேல் முடிந்தால் கொஞ்சம் எட்டிப் பார்த்து விட்டு வாருங்கள்.குறிப்பாக சம்பா நடனத்தை மிஸ் பண்ணவே பண்ணாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணல் – ஆண்மையின் அடையாளம்!

முனைவர் சுந்தர ஆவுடையப்பன்

ஆண்கள் தலையிலும் முகத்திலும் முடிவளர்த்துக் கொள்வதையும் மழித்துக் கொள்வதையும் வழக்கமாகக் கொண்டிருக்கும் செய்தி சங்க காலந்தொட்டே இருக்கிறது.

'மழித்தலும் நீட்டலும் வேண்டா' எனத் திருவள்ளுவர் கூறியுள்ளதிலிருந்து இதனை அறியலாம். நீண்ட தலை முடியையும் நீண்ட தாடியையும் வைத்துக் கொள்பவர்கள் பெரும்பாலும் தவசீலர்களாகவே இருந்து வருகின்றனர். இருந்தாலும் உலகியல் வாழ்வில் உள்ளவர்களும் தாடி வைத்திருந்த செய்தியை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

தாடியைச் சங்க இலக்கியம் 'அணல்' என்று கூறுகிறது. இன்று தாடி வைத்துக் கொள்வதை சோகத்தின் அடையாளமாகச் சிலர் வெளிப்படுத்துகின்றனர். சிலருக்கு அது சிந்தனையின் அடையாளம், சிலர் அழகின் அடையாளமாகக் கொண்டிருக்கின்றனர். சங்க காலத்தில் 'தாடி' ஆண்மையின் அடையாளமாக இருந்த செய்தியைப் புறநானூறு குறிப்பிடுகிறது.

**'அடி புனை தொடுகழல்**
**மைஅணற் காளைக்கு என்**
**தொடி கழித்திடல் யான் யாய்**
**அஞ்சுவலே!'**
**(புறநா-83)**

காலில் செறிந்த வீரக் கழலை உடையவன்; மை போன்ற கரிய தாடியை உடையவன்.அத்தகையவனுக்காக என் கை வளையல் கழன்று போகின்றனவே! எனப் பெருநற்கிள்ளியைப் புகழ்ந்து தம் காதலை நக்கண்ணையார் எனும் புலவர் வெளிப்படுத்திப் பாடியுள்ளார்.

**'புலம் புக்கனனே! புல் அணற் காளை'**
**(புறநா-28)**

எனும் புறநானூற்றுப் பாடலில் ஒரு வீரனுக்குப் புற்களைப் போல முகத்தில் தாடி மண்டிக்கிடந்த செய்தியை அறிய முடிகிறது. சில சங்கப் பாடல்களில் உடன் போக்கில் செல்லும் தலைவனைக் குறிக்கும்போது அவனை 'மை அணல் காளை-கருமையான தாடியை உடைய இளைஞன்' என்று அடையாளப்படுத்திப் பாடியுள்ளதை அறியமுடிகிறது.

'மதி உடம்படுத்த மை அணற் காளை' என அகநானூறும் (221) 'மை அணற் காளையொடு பைய இயலி' என ஐங்குறுநூறும் (389) குறிக்கின்றன.

**'இன்றே**
**மை அணற் காளை பொய் புகலா**
**அருஞ்சுரம் இறந்தனள் என்ப'**
**(நாற்.179)**

என நற்றிணைப் பாடலும் சுட்டுகிறது. தலைவியின் வீட்டார், திருமணத்துக்கு ஒப்புக்கொள்ளாத போது, தலைவன், தலைவியை அழைத்துக் கொண்டு உடன்போக்குச் செல்வது சங்ககால மரபு.அவ்வாறு அவர்கள் உடன்போக்குச் செல்லும்வழி கடுமையான பாலை நிலமாகவே இருக்கும். தலைவியை அழைத்துச் செல்லும் தலைவன், கரிய தாடியை வைத்திருந்தான் என்று குறிக்கப்பெறுகிறான். உடன்போக்குச் செல்வதற்குத் துணிச்சல் வேண்டும். அதே நேரத்தில் தலைவியின் வருத்தத்தையும் தன் வருத்தத்தோடு இணைத்துக் கொள்ளும் பக்குவமும் வலி ஏற்கும் உடலும் வேண்டும். எனவே, வருத்தம் தோய்ந்த துணிச்சல் உள்ளத்தின் அடையாளமாகத் தாடி இங்கே தலைவனுக்குப் பொருந்தியிருக்கிறது எனலாம்.

அணல் என்பது தாடி என்றால், மை அணல் என்பது மைபோன்ற கறுத்த தாடி என்று பொருள். 'மை அணல்' என்று வருகிற இடங்களில் எல்லாம், குறிக்கப் பெறும் தலைவன், இளமையும் ஆண்மையும் பொருந்தியவன் என்பதை உணரமுடிகிறது.

நற்றிணையில் ஒரு தலைவியின் தந்தை பற்றிய குறிப்பில், 'அவன் மை போன்ற கருந்தாடி உடையவன்' என்று சுட்டப்படுகிறான்.

**'மை அணல் எருத்தின்**
**முன்பின் தடக்கை**
**வல்வில் அம்பின் எய்யா**
**வண்மகிழ்த்**
**தந்தை தன் ஊர் இதுவே'**
**(நற்-198)**

தலைவி, இது என் ஊர் என்று குறிப்பிடாமல், வீரம் பொருந்திய தனது தந்தையின் ஊர் என்று குறிப்பிடுகிறாள். இங்கே கருந்தாடி ஆண்மை, வீரம், பெருமிதம் ஆகியவற்றின் அடையாளமாக அமைகிறது. தற்காலத்தில், தாடி வைப்போர் அதை அதிகம் வைக்காமல், கத்திரிக்கோலால் அளவுபடுத்தி வெட்டி அழகு செய்து கொள்வார்கள். இப்படிப்பட்ட தாடி அழகு முறைமை சங்க காலத்திலும் இருந்தது என்பதைப் புறநானூற்றுப் பாடல் ஒன்றின் மூலம் அறியமுடிகிறது.

**'குச்சின் நிரைத்த குரூஉ மயிர் மோவாய்**
**செவி இறந்து தாழ்தரும் கவுளன்' ( புறநா.257)**

ஒரு வீரன் குச்சுப்புல் போன்ற குறுந்தாடி வைத்திருப்பதையும் அவனது தலைமுடி காதுகளை மறைந்து வளர்ந்திருந்ததையும் இந்தப் பாடல் குறிக்கிறது.

சங்க இலக்கியம் 'அணல்' என்ற சொல்லால் மனிதர்களின் தாடியை மட்டும் குறிப்பிடாமல் கோழி, சேவல், ஓந்தி, குரங்கு ஆகியவற்றின் தாழ் கழுத்து மயிரையும் குறிப்பிடுகிறது.

'உள் இறைக் குரீஇக் கார் அணல் சேவல்' என்று நற்றிணை (181) கரிய மோவாயை உடைய குருவியின் சேவலையும், 'மனைஉறை கோழி அணல் தாழ்வு அன்ன' என்று அகநானூறு (187) கோழியின் தாழ் மயிரையும் 'வைவால் ஓதி மை அணல்' என்று அகநானூறு (125) ஓந்தியின் தாடியையும் குறிப்பிடுகின்றன. நற்றிணை (22) குறிப்பிடும் மந்தியின் செயல் காட்சி நகைப்புக்குரியது.

தினைப்புனத்தில் தினைக் கதிர்களைப் பறித்துக்கொண்டு, கடுவன் எனப்படும் ஆண் குரங்கு கோடு மலையேறிய மந்தி எனப்படும் பெண் குரங்கு தினைக் கதிர்களை நிமிண்டி, அலை அலையாய் இருந்த தாடியை உடைய கன்னம் (வாய்) நிறைய அமுக்கிக் கொள்கிறதாம். இக்காட்சி நோன்பிருக்கும் தவசீலர்கள் தாடியோடு காட்சியளிப்பதற்கு இணையாக இருக்கிறதாம்.

அணல் தரும் குறிப்புகள், உயிரினங்களுக்குத் தரும் அடையாளங்கள் ஏராளம் உள்ளன.

இலக்கிய சுவை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேநீர் தோன்றியது எப்படி?



தேநீர் (டீ) தோன்றியது எப்படி என்பது குறித்த சுவையான பல செய்திகளை 5 ஆயிரம் ஆண்டு கால தேநீர் என்ற தலைப்பிலான ஹொங்கொங் புத்தகம் தெரிவித்துள்ளது. அவற்றில் முக்கியமானது இது தான். சீனாவில் புகழ்பெற்ற பேரரசர் ஷென்-ஹங் ஒரு நாள் தன்னுடைய மலர்த் தோட்டத்தில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்த கொப்பரை அருகில் அமர்ந்து அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். இது நடந்தது 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு. அந்தக் கொதிநீரில் அதற்கு மேலிருந்த மரத்தின் இலைகள் சில உதிர்ந்து விழுந்தன. அப்படி விழுந்தவுடன் அத்தண்ணீரில் இருந்து அருமையான நறுமணம் எழுந்தது. அதைக் கூர்ந்து கவனித்த பேரரசர் ஷென்-ஹங், அந்த இலை விழுந்த பகுதியிலிருந்து வெந்நீர் கொஞ்சம் எடுத்து குடித்துப் பார்த்தார். 'ஆகா.. என்ன அருமையான சுவை' என்று பேரரசர் கூற, தேநீர் தோன்றிவிட்டது.




# ஸ்டெதஸ்கோப்



லேசா காய்ச்சல் அடிச்சாக்கூட டாக்டர் இரு காதுகளிலும் வோக்மேன் போல குழாய்களை மாட்டிக்கொண்டு நம் மார்பில் ஒரு குழாயை வைத்து பரிசோதிப்பதைப் பார்க்கலாம்.இந்தக் கருவியின் பெயர்தான் ஸ்டெதஸ்கோப்.இது நம் உடலில் உண்டான நோயின் தன்மையை உணர்ந்து அதற்கேற்ப சிகிச்சை அளிக்கப் பயன்படுகிறது.இதை முதலில் 1816 இல் ரேனே தேபைல் ஹைசிந்த் லேனேக் என்ற பிரெஞ்ச் டாக்டர் தயாரித்தார்.முதலில் ஒரு அடி நீளமுள்ள மெல்லிய மரக் குழல் வடிவில் தான் ஸ்டெதஸ்கோப் இருந்தது.

தெருவில் நடந்து சென்ற லேனேக் சிறுவர்கள் மரக்குழாயை வைத்து டெலிபோனில் பேசுவதைப்போல பேசி விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்தார்.அதைக் கண்டு உற்சாகம் அடைந்தார்.லேனேக் வீட்டுக்கு வந்ததும் ஸ்டெதஸ்கோப்பைத் தயாரித்து விட்டார்.நோய் தாக்கும்போது உடலில் இருந்து சில விநோத சப்தங்கள் வெளிவரும்.அதை ஸ்டெதஸ்கோப் வைத்து உன்னிப்பாக கண்டறிந்த லேனேக் டி லேஸ்குலேஷன் மீடியேட் என்ற மருத்துவப் புத்தகத்தை எழுதினார்.ஒஸ்குலேஷன் என்பது உடலுக்குள் கேட்கிற சத்தங்களை அறிவது.இதை வைத்துத்தான் நவீன கால ஸ்டெதஸ்கோப்களைத் தயாரிக்கின்றனர்.1855 இல் டாக்டர் சேமென் என்பவர் ஸ்டெதஸ்கோப்பை தற்போது புழக்கத்தில் இருக்கும் வடிவத்திற்கு மாற்றி அமைத்தார்.நவீன ஸ்டெதஸ்கோப்பில் இரண்டு காதுகளுக்கும் கேட்கும்படியான ஒலிமானிகள் ஒரு நீண்ட ரப்பர் குழாயில் செஸ்ட் பீஸ் எனப்படும் ஒரு உலோக வட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.செஸ்ட் பீஸை மார்பில் வைத்துப்பார்க்கும் போது உள்உடல் ஒலிகளை செஸ்ட் பீஸ் துல்லியமாக வாங்கி ஒலிமானிகள் வழியாக டாக்டரின் காதுகளுக்கு அனுப்புகின்றது.அதிநவீன ஸ்டெதஸ்கோப்பில் மென்மையான ஒலிகளுக்கு ஒரு செஸ்ட் பீஸும் அதிவேக ஒலி அலைகளை வாங்கிக்கொள்ள இன்னொரு செஸ்ட் பீஸும் உள்ளது.

## தெரிந்துகொள்ளுங்கள்

★ ஆந்தையின் பார்வை மனிதனை விட 82 மடங்கு கூர்மையானது.

★ சுமத்ரா தீவில் வாழும் காண்டா மிருகத்திற்கு இரண்டு கொம்புகள் உள்ளன.

★ சூரியனில் இருந்து வெளியாகும் சக்திக்குப் பெயர் இன்சொலேஷன்.

★ முதலைக்கு வாழ்நாளில் எத்தனை பற்கள் விழுந்தாலும் முளைத்துவிடும்.

★ சிங்கப்பூரை நிறுவியவர் சேர் தோமஸ் ஸ்டாம்ப் போர்ட்.

# குறுக்கெழுத்துப்போட்டி - 94

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | X | 11 |
| 12 | 13 | 14 | 15 | X | 16 |
| 17 | 18 | 19 | 20 | X | 21 |
| 22 | X | X | X | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**இடமிருந்து வலம்**

1. காது குத்துதலை இப்படிச் சொல்வர்.
7. 27 நட்சத்திரங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
12. உரை, வேதம் என்று அர்த்தம் கொள்ளலாம். (குழம்பியுள்ளது)
17. வெள்ளியம், உலோகத்தகடு (குழம்பியுள்ளது)
23. இனம்,குலம் (திரும்பியுள்ளது)
25. கொற்றவை (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. திரைப்பட பாடலாசிரியர் கண்ணதாசனின் பெயருடன் இணைந்திருக்கும் அடைமொழி.
2. செருக்கு,தற்பெருமை (குழம்பியுள்ளது)
3. பசுவின் மலம் (குழம்பியுள்ளது)
4. ஊதியம், சம்பளம் (குழம்பியுள்ளது)
6. மூவகைக் குணங்களில் உயர்ந்த குணம் (குழம்பியுள்ளது)
23. முஸ்லிம்களுக்கான நீதிமன்றம் (தலைகீழ்)

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

## குறுக்கெழுத்துப்போட்டி - 92 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1.ஈமக்கடன் | 1.ஈசத்துவம் |
| 7. சகடம் | 2.மகதி |
| 12. மத்திகை | 3. மடக்கு |
| 18. தருக்கு | 4. கைதகம் |
| 22.பவ | 6.எமதருமன் |
| 24.சம | 20.சக்தி |
| 26. எதிர்காலம் | 23. பல |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எம்.எவ்.அஹ்மத் அஸீம்,**
**இல.123/16 சமகி மாவத்தை,**
**புத்தளம்.**

## பாராட்டுப் பெறுவோர்

01. திருமதி ஆர்.புண்ணியமூர்த்தி
புகையிரத வீதி,
மட்டக்களப்பு.

02. என்.எம்.அஷ்கர்
பிரதான வீதி,
மருதமுனை.

03. என்.லோஜினி
காலிவீதி,
வெள்ளவத்தை.

04. கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

05. எஸ்.புவியரசன்
பசறை.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாணத் திருமணம்




பிரித்தானியர்களான கெலி கிளிங்ரன் லீ விக்கெற்ஸ் ஆகிய இருவரும் பிரிமிங்கம் நகரத்தில் கடந்த 11 வருடங்களாக சேர்ந்து வாழ்ந்து இருக்கின்றார்கள்.

இவர்கள் ஏழ்மையான நிலையில் இருந்தமையால் திருமணம் முடிப்பதில் சிக்கல் நிலை காணப்பட்டது.இதனால் உள்ளூர் வானொலி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு வெற்றி கொண்டதன் மூலம் அவர்கள் மூலம் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது.இதில் பலர் பங்குகொண்ட போதும் ரசிகர்களின் அமோக ஆதரவினைப் பெற்று இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமணம் என்பது சாதாரணமல்ல.முழு நிர்வாணக்கோலத்தில் இத்திருமணம் நடைபெற்றுள்ளது.

திருமணம் *Brook Honiley Court Hotel* இல் இடம்பெற்றது.திருமணம் நிறைவு பெறும் வரை மணமகன்,மணமகள் இருவரும் கிட்டத்தட்ட முழு நிர்வாணமாகவே காட்சி கொடுத்தனர்.

திருமண வைபவத்துக்கு குடும்பத்தினர்கள்,உறவினர்கள்,நண்பர்கள் ஆகியோரும் வந்து வாழ்த்து தெரிவித்தபோதும் இவர்கள் முன்னிலையில் நிர்வாணமாக தோன்றிய போதும் மிகவும் கூச்சமாக இருந்து சங்கடப்பட்டனர் இத் தம்பதியினர்.

# அதிர வைத்த பொம்மை



ரஷ்யாவின் பெட்ரோஷோவோட்ஸ்க் பகுதியில் உள்ள ஒரு தபால் அலுவலகம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. தபால் அதிகாரிகள் பார்சல்களை சரி பார்த்து அனுப்பும் பணியில் ஈடுபட்டனர். அப்போது ஒரு பார்சலில் 'டிக் டிக்' ஒலி கேட்டது.

உடனே தபால் அதிகாரிகள் பயந்தனர். வெடிகுண்டு நிபுணர்களுக்கு தகவல் பறந்தது. அவர்கள் வந்ததும் அந்த பார்சலை தனி அறைக்கு எடுத்துச் சென்றனர்,

பார்சலை பிரித் ததும் அதிகாரிகள் அதிர்ந்து போனார்கள்.

அந்த குழுவுக்கு தலைமை தாங்கிய பெண் அதிகாரி மட்டும் வெட்கத்தால் முகத்தை திருப்பிக்கொண்டார். ஏனெனில் பார்சலில் இருந்தது 'செக்ஸ் பொம்மை'.

நிறைய பார்சல்களோடு கிடந்ததால் எப்படியோ அந்த பொம்மையின் பட்டன் அழுத்தப்பட்டு 'சுவிட்ச்' ஆன் ஆகி ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது. அது வெடிகுண்டு அல்ல என்று தெரிந்த பிறகு பீதி அடங்கியது.

# வழுக்கிய வழக்கு



இடா வேலன்டைன் என்ற 58 வயது அமெரிக்க மூதாட்டி ஒருநாள் வீதியோரமாக நடந்து சென்று கொண்டிருந்தார். ஒரு பெரிய பல்பொருள் அங்காடி அருகே வந்தபோது திடீரென்று கால் இடறி கீழே விழுந்தார். கடை முன்பு கிடந்த வாழைப்பழ தோல் வழுக்கிவிட்டது பிறகுதான் தெரிந்தது.

கீழே விழுந்த அவருக்கு காயம் ஏற்பட்டது. இதற்காக சிகிச்சை பெற்றதில் 9 ஆயிரம் டொலர் மருத்துவச்செலவு ஏற்பட்டதாம். இதனால் அவர் எந்தக் கடை முன்பு வாழைப்பழத் தோல் கிடந்ததோ அந்தக் கடை மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

மருத்துவச்செலவு போக மருத்துவ காலத்தில் ஏற்பட்ட உணவு உள்ளிட்ட செலவுகளுக்கும் சேர்த்து நிவாரணம் கேட்டிருந்தார்.இந்தச் சம்பவம் நடந்தது கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம். ஆரம்பத்தில் எங்களுக்கு இதில் பொறுப்பு இல்லை என்று சமாளித்து வந்த அந்த நிறுவனம் தற்போது இழப்பீடு தர சம்மதித்துள்ளது.

ஆனால், ஓராண்டுக்குள்ளாக நிவாரணத் தொகை பலமடங்கு உயர்ந்து 20 இலட்சம் டொலராகி விட்டது. வழுக்கி விழுந்தாலும் வாலன்டைனைப்போல வழுக்கி விழ வேண்டும் என்று யோசிக்கிறீங்களா?

# நாய் செய்த சத்திர சிகிச்சை

ஜேம்ஸ் லிட்டில் (வயது 61) என்பவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்.கால்களில் உள்ள சில விரல்களை சத்திரசிகிச்சை செய்து நீக்கும் அளவுக்கு தீவிர நோய் பாதிப்பு இருந்தது. சத்திரசிகிச்சை சரியான நாளை எதிர்பார்த்து காலம் கடத்தி வந்தார் ஜேம்ஸ்.

சம்பவத்தன்று அவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது அவரது வளர்ப்பு நாய் ஷிபா இனு அருகில் படுத்திருந்தது. திடீரென்று எஜமானரின் காலை மோந்து பார்த்த நாய் 3 விரல்களை அல்வா துண்டுபோல கடித்து தின்றுவிட்டது. அந்த விரல் பகுதிகளில் உணர்ச்சி இல்லாததால் நடந்தது எதுவும் தெரியாமல் எஜமானார் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

காலையில் கண்விழித்தபோது தனது விரல்கள் நாயால் பதம் பார்க்கப்பட்டது கண்டு அதிர்ச்சியடைந்த அவர் அலறியடித்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றார். பரிசோதனை செய்த டாக்டர்கள் ஆபத்து ஒன்றுமில்லை. நாங்கள் செய்ய வேண்டிய வேலையை நாய் செய்து விட்டது என்றார்கள். நாய்க்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமோ என பரிசோதித்து வருகிறார்கள் டாக்டர்கள். இந்தச் சம்பவம் நடந்தது அமெரிக்காவில். இப்போது செலவில்லாமல் சத்திரசிகிச்சை முடிந்துவிட்ட சந்தோசத்தில் குதிக்கிறார் பெருசு.



# வலையில் சிக்கிய கார்கள்

அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கார்கள் வலையில் சிக்கி இயங்க முடியாமல் தவிக்கிறது. அது என்ன வலை? சிலந்தி வலை! தொடர்ந்து படியுங்கள்.

ஜப்பான் நிறுவனம் ஒன்று விலையுயர்ந்த 67 ஆயிரத்து 500 புதிய கார்களைத் தயாரித்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்தது. சில நாட்களிலேயே என்ஜின்கள் சரியாகச் செயல்படாமல் சில கார்கள் மக்கர் செய்தன. என்ஜினை சோதனை செய்தபோது உள்ளே சிலந்தி கூடுகட்டி இருந்ததால் பிரச்சினை ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அனைத்துக் கார்களையும் சரி செய்து கொடுப்பதற்காகத் திரும்ப எடுத்துக் கொண்டது அந்த நிறுவனம். என்ஜினில் சிலந்தி கூடுகட்டினால் என்ஜின் செயல்பாடு பாதிக்கும்.விரைவில் சூடாகி சிலந்திக் கூடுகளில் தீப்பற்றி கார் விபத்துக்குள்ளாகவும் செய்யும். சிலந்திக் கூடு கட்டாத வகையில் என்ஜினை வடிவமைக்க முயற்சிக்கிறோம் என்று பதிலளித்துள்ளது அந்த நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலையில் மேக்னா ராஜ்

கஷ்டப்பட்டு உழைச்சு நடிச்ச கிருஷ்ண லீலை படம் வெளியாகாதது வருத்தமாக உள்ளது. என்னைப் போன்ற பலரின் உழைப்பும் வீணாகப் போகிறதே என கவலையுடன் தெரிவித்தார் நடிகை மேக்னா ராஜ். ஜீவன், மேக்னா ராஜ் ஜோடியாக நடித்த படம் கிருஷ்ணலீலை. ஷெல்வன் இயக்கியுள்ளார். இப்படம் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் வெளியாகவில்லை என ஷெல்வன் புகார் கூறினார். படத்தை வெளியிட வலியுறுத்தி தயாரிப்பாளர் வீட்டு முன் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அறிவித்தார். இப்போது படத்தின் நாயகி மேக்னா ராஜும் தனது வருத்தத்தை வெளிப்படையாக கூற ஆரம்பித்துள்ளார். அவர் கூறுகையில்; 'கிருஷ்ணலீலை படம் சிறப்பாக வந்துள்ளது. அப்படம் இன்னும் வெளியாகாமல் முடங்கி இருப்பது வருத்தமாக உள்ளது. இயக்குநர், நடிகர், நடிகை,தொழில்நுட்ப கலைஞர்கள் உழைப்பெல்லாம் இதனால் வீணாகிக் கொண்டிருக்கிறது. இந்தப் படம் சீக்கிரம் வர வேண்டும். இதில் நடித்த பணியாற்றிய அத்தனை பேருக்குமே பிரேக் தரும் இந்தப் படம் என்று எல்லோருமே எதிர்பார்க்கிறார்கள். உண்மையில் எனக்கு கிருஷ்ணலீலை தான் முதல் படம். எனவே இந்தப் படம் விரைவில் வரவேண்டும் என்று விரும்புகிறேன். இயக்குநருக்கும் அந்த படத்தை வைத்துத்தான் புதுப்பட வாய்ப்புகள் வரும். எனவே உடனே வெளியீடு செய்ய வேண்டும்' என்றார்.



மேக்னா ராஜ்

Saturday சினிமா

## விஸ்வரூப இரகசியம்



விஸ்வரூபம் படத்தில் நாயகியாக நடிக்கிறார் என்று இன்னும் யார் யாரையெல்லாம் லிஸ்ட் போடுவார்களோ தெரியாது. தற்போதைய அனுமதி ப்ரியா ஆனந்த். அப்படியே இவர் நடிக்க ஒப்புக் கொண்டாலும் ஒரு சில காட்சிகளில் ஓடி விடலாம். ஏனென்றால் வேடம் அப்படி! வெகு நாட்களாக நெகட்டிவ் ரோலில் நடிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தாராம் கமல். எப்படி என்றால், முன்பு சிகப்பு ரோஜாக்களில் வருவாரே... அப்படி ! நியாயமான காரணத்திற்காக காதலை வெறுக்கும் ஒரு நாயகன், சைக்கோ கொலையாளியாக மாறி ஒவ்வொரு பெண்ணாக போட்டுத் தள்ளுகிற கதைதானாம் இது. ஆனால் இதிலும் கமலுக்கு அழகான ஒரு லவ் இருக்கும். இப்படி போகிற கதையைத்தான் பெரிய பட்ஜெட்டில் எடுக்க முனைந்திருக்கிறாராம் கமல்.தான் சம்பந்தப்பட்ட படங்களில் எல்லாம் ஸ்டோரி போர்ட் என்று சொல்லப்படும் கமிராக் கோண வரைபடங்களை பக்கவாக தயார் செய்து கொள்வார் கமல்.

இது தயாரான பின்பு தான் படப்பிடிப்புக்கே செல்வார். இந்த முறையும் ஸ்டோரி போர்ட் தயாராகிவிட்டதாம். கமல் சார், 'டேக் ஆக்கூஷன்' சொல்ல வேண்டியதுதான் பாக்கி. கதாநாயகி? போகிற இடத்தில் சிக்கினாலும் ஆச்சர்யமில்லை!.

தமிழ் சினிமாவின் முன்னணி இளம் நாயகர்கள் அநேகமாக அனைவருடனும் நடித்திருக்கிறார் தமன்னா. விக்ரம் மட்டும் பாக்கி. அவருடன் ஜோடி சேர்ந்தால் இந்த வட்டம் முழுமையடையும். தமன்னாவுக்கு தற்போது தமிழில் படங்களில்லை .தெலுங்கில் இரு படங்கள் உள்ளன. இந்நிலையில் விக்ரமுடன் ஜோடி சேர ஆசைப்படுவதாக வெளிப்படையாக தெரிவித்துள்ளார். தெய்வத்திருமகள் பார்த்த பிறகு விக்ரமுடன் இணைந்து நடிக்கும் விருப்பம் வலுப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சசீந்திரன் படத்தில் நடித்துவரும் விக்ரம் அடுத்து தரணி, லிங்குசாமி உள்ளிட்ட இயக்குநர்களின் படங்களில் நடிக்கவுள்ளார்.இதை மனதில் வைத்தே தமன்னா தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.



சசீந்திரன் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் ராஜபாட்டை படப்பிடிப்பு கடந்த சில வாரங்களாக நடக்கவில்லை. தெய்வத்திருமகள் ப்ரமோஷனுக்கு இந்த லீவை நன்கு பயன்படுத்திக் கொண்டார் விக்ரம். அவர் இப்போது படப்பிடிப்புக்கு தயார். ஆனால், படப்பிடிப்புத்தான் நடக்கும் போல் தெரியவில்லை. ராஜபாட்டை தயாரிப்பாளர் ரமேஷ் ஆந்திர பொலிஸாரால் கைது செய்யப்பட்ட போது, படப்பிடிப்பு தடைப்படாது அவரது மகன்கள் தயாரிப்பை கவனித்துக் கொள்வார்கள் என தடபுடலாக அறிக்கைவிட்டார்கள். எல்லாம் இப்போது அடங்கிவிட்டது. பணம் முதலீடு செய்ய முடியாத சூழல் காரணமாக படத்தையே கைமாற்றிவிட வேலை நடப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன, அநேகமாக தானு கைக்கு ராஜபாட்டை செல்லலாம் என்கிறார்கள்.




கௌதம் வாசுதேவ மேனனின் போட்டோன் கதாஸ் தயாரித்திருக்கும் வெப்பம் படத்துக்கு சென்சார் ஏ சான்றிதழ் வழங்கியுள்ளது. வெப்பத்தை அஞ்சனா இயக்கியுள்ளார்.இவர் கௌதமின் உதவியாளர். வட சென்னையின் நிழல் உலகம் தான் படத்தின் கதைக்களம்.கார்த்திக் குமார், பிந்து மாதவி நடித்துள்ளனர். ஜோஷ்வா ஸ்ரீதர் இசை. படத்தைப் பார்த்த சென்சார் ஏ சான்றிதழ் வழங்கியுள்ளது.வெப்பத்தில் பிந்து மாதவி பாலியல் தொழிலாளியாக நடிப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிம்புவுக்கு வில்லனின் அறிவுரை

தபாங் படத்தின் இறுதிக்காட்சியில் கோபத்தில் சல்மான்கானின் உடம்பு திமிறும் . வில்லன் சோனு சூட்டை முறைத்துக் கொண்டிருக்கும் போதே போட்டிருக்கும் சட்டை அங்கங்கே கிழியும், மசில் திரண்டு சட்டையை கிழிக்கிறதாம்.அப்புறம் காற்று கிழிந்த சட்டையை தூக்கிச் செல்ல, சிக்ஸ்பேக் உடம்புடன் சல்மான் வில்லனை புரட்டத் தயாராவார். தபாங்கின் தமிழ் ரீமேக் ஒஸ்தியிலும் இந்தக் காட்சியை வைக்க சிம்பு ஆசைப்படுகிறார் போல. குறைந்த பட்சம் சிக்ஸ்பேக்காவது இருந்தால் தான் சல்மான்கான் செய்ததில் பாதியாவது கொண்டுவர முடியும். எப்படியும் சிக்ஸ்பேக் அவசியம். இதனை உணர்ந்து தினமும் ஜிம்முக்கு சென்று வருகிறார். முப்பதே நாளில் இந்தி மாதிரி ஆறே நாளில் சிக்ஸ்பேக் அட்வைஸ் தருகிறார் சோனு சூட். இந்தியில் நடித்தவரே இதிலும் வில்லன். சோனு சூட் சல்மானைவிடவும் கச்சிதமாக உடம்பை பேணுகிறவர். வில்லனை அடிக்க நாயகனுக்கு சிக்ஸ்பேக் அட்வைஸ் தருவதே வில்லன் தான்.


காஞ்சனா – சரத்குமார்

காஞ்சனா தமிழைவிட தெலுங்கில் ஆரவாரமாக கொண்டாடப்படுகிறது. படம் அங்கு சூப்பர் ஹிட். தமிழுக்கு முன்பே படம் ஆந்திராவில் வெளியாகிவிட்டது. படத்தின் வருமானம் கன்னாபின்னாவென்று இருப்பதால் தெலுங்கு தயாரிப்பாளர் மகிழ்ந்து போய் கார் ஒன்றை பரிசளித்திருக்கிறார். சாதாரண கார் இல்லை. பென்ஸ் கார். அத்துடன் புதிய வாய்ப்பு ஒன்றும் லோரன்ஸுக்கு தெலுங்கில் கிடைத்துள்ளது. பிரபாஸ் நடிக்கும் படத்தை இயக்குகிறார். எல்லாம் காஞ்சனா வருமானத்தால் கிடைத்த அதிர்ஷ்டம்.


உறுமி — பிருத்விராஜ், ஜெனிலியா

வாண்டட் வெற்றிக்குப் பிறகு இந்தியில் பிரபுதேவாவின் தேவை அதிகரித்திருக்கிறது. லம்பாக சம்பளம். சின்ன இடைவெளிக்குப் பிறகு இந்தி படத்தை ஒத்துக்கொண்டிருக்கிறார். தென்னிந்திய மொழிப் படங்கள் தான் இப்போது இந்திபொக்ஸ் ஒபிஸை ஆட்சி செய்கின்றன.இந்த வருடத்தின் இரு சூப்பர்ஹிட் படங்களும் தென்னிந்தியப் படங்களின் ரீமேக்கே. பிரபுதேவா அக்சய் குமாரை வைத்து தனது அடுத்த படத்தை இயக்குகிறார்.படத்துக்கு ரவுடி ரத்தோர் என்று பெயர் வைத்துள்ளனர். படம் ஆக்சன் ப்ளேவரில் தயாராகிறது. பிரபுதேவாவின் பிற படங்களைப் போல இதுவும் ரீமேக். எந்தப் படத்தின் ரீமேக் என்பதை இரகசியமாக வைத்துள்ளனர். விஷாலை வைத்து இயக்கும் வெடி முடிந்ததும் ரவுடிக்கு ட்ரான்ஸ்பர் ஆகிறார் பிரபுதேவா.

# குத்துப் பாட்டுக்கு ஆடும் கரிஷ்மா



திருமணத்திற்குப் பிறகு நடிப்புக்கு குட்பை சொல்லியிருந்த கரிஷ்மா கபூர் தற்போது ஹவுஸ்புல் 2 படத்தில் குத்துப்பாட்டுக்கு ஆட விருக்கிறார். நடிகை கரிஷ்மா கபூர் தனது நீண்ட நாள் நண்பர் சஞ்சய் கபூரைத் திருமணம் செய்த பிறகு நடிப்புக்கு குட்பை சொல்லிவிட்டார். அவர்களுக்கு சமைரா என்ற மகளும், கியான் என்ற மகனும் உள்ளனர். இந்நிலையில் கரிஷ்மா தனது கணவரை விவகாரத்து செய்யப்போவதாக செய்திகள் வெளியாகின. இத்தனை நாட்கள் பொலிவூட்டை விட்டு விலகி இருந்த கரிஷ்மா தற்போது விக்ரம் பட்டின் 'டேஞ்ஜரஸ் இஷ்க்' என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இதையடுத்து கரிஷ்மாவின் நீண்ட கால நண்பரான சஜித் நாதியத்வாலாவின் ஹவுஸ்புல் 2 என்ற படத்தில் குத்துப் பாட்டுக்கு ஆட சம்மதித்துள்ளார்.முதலில் இந்த பாட்டிற்கு ஆட ராணி முகர்ஜியிடம் தான் கேட்டிருந்தனர். ராணி மறுக்கவே அந்த வாய்ப்பு கரிஷ்மாவுக்கு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநலம் மிக்க ஆண்கள்



வீட்டு வேலைகளை முடித்துவிட்டு படுக்கைக்கு வரும் பெண்களுக்கு கிடைக்கும் மன அமைதியே கணவரின் அணைப்பில் கிடைக்கும் தாம்பத்திய சுகம் தான். அதிலும் அவசரத்துடன் செயற்பட்டால் ஆண்கள் மீது கோபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக ஒரு ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரியம் முடிந்ததென்று கால்நீட்டி படுத்து விடும் கணவர்கள் மீது நாளுக்கு நாள் வெறுப்புதான் அதிகமாகும். என்றும் அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. 'தி ஜேர்னல் ஒப் செக்ஸுவல் மெடிசின்' என்ற இதழில் இந்த ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

5600 ஜப்பானிய பெண்களிடம் இது தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் 50 சதவீதம் பேர்,
செக்ஸ் உறவுக்குப் பின்னரும் கூட நீண்ட நேரம் தங்களது துணைவர் தங்களுடன் சேர்ந்திருப்பதை விரும்புவதாக தெரிவித்துள்ளனர்.

44 சதவீதம் பேர் 'முன் விளையாட்டை' அதிகம் விரும்புவதாக கூறியுள்ளனர்.அதாவது கிளைமேக்ஸை விட முன் விளையாட்டுதான் தங்களுக்கு அதிகம் பிடித்திருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர்.

38 சதவீதம் பேர் நீண்ட நேர உடலுறவே தங்களுக்குப் பிடித்திருப்பதாக தெரிவித்துள்ளனர். 38.8 சதவீதம் பேர் செக்ஸ் விளையாட்டுகள், முறைகள் குறித்து தங்களது துணைவர்களுடன் விவாதிப்பதில்லை என்று கருத்து தெரிவித்துள்ளனர். அதேசமயம் தங்களது துணைவர்கள் செக்ஸ் விஷயத்தில் எல்லாம் தெரிந்த ஏகாம்பரமாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பெண்களிடம் பொதுவாக உள்ளதாம், கருத்துக் கணிப்பில் கலந்து கொண்டவர்களில் 30 சதவீதம் பேரில், 26.5
சதவீதம் பேர் தங்களது துணைவர்கள் சுயநலம் மிக்கவர்கள் என கருத்து தெரிவித்துள்ளனர். 6.9 சதவீதம் பேர் சுயநலம் என்கிறார்கள்.

காதல் கனிந்து உறவைத் தொடங்கும் போது நடத்தப்படும் முன் விளையாட்டுக்கள் ஒரு ஆரம்பம்தான், ஆனால் அதன் பின்னர் தான் பெண்களின் உணர்வுகள் பொங்கிப்பெருகுமாம்.

அந்தசமயத்தில் அதைபொருட்படுத்தாமல் அல்லது கவனிக்காமல், அரவணைத்து அமைதிப்படுத்தாமல், தூங்கப்போகும்போதுதான் ஆண்கள் மீது பெண்களுக்கு கோபம் கோபமாக வருமாம்.

முன் விளையாட்டு மட்டுமல்ல, உறவுக்குப் பிந்தைய நெருக்கமும் அன்யோன்யமும் அரவணைப்பு கூட ரொம்ப முக்கியமாம். அப்போதுதான் அவர்களுக்கு முழுமையான திருப்தி ஏற்படுகிறதாம்.

ஆண்களுக்கு உடலுறவு மட்டுமே முக்கிய நோக்கம். அந்த இலக்கை முடித்தவுடன் ஓய்வுபெற்று விடுகிறார்கள் என்ற பொதுவான கருத்து உள்ளது. அதேசமயம், உடலுறவை முடித்த பின்னரும் கூட நீண்ட நேரம் தலையைக் கோதியபடியோ அல்லது அரவணைத்தபடியோ இருக்கும் ஆண்களைத்தான் பெண்களுக்கு மிகவும் பிடிக்குமாம்.

இப்படிப்பட்ட உறவுதான் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் என்று பெண்கள் கருதுகிறார்கள். அப்படிச் செய்யும் ஆண்கள் மீதுதான் பெண்களுக்கு காதல் உணர்வு பொங்கி வழியுமாம்.



நான்சி ஜேசி டுக்கார்ட் பிலிப் காரிடோ

# 18 வருட பாலியல் வல்லுறவுக்கு 431 ஆண்டுகள் சிறை



ஜேசி டுக்கார்ட்

அமெரிக்காவையும் அகில உலகையும் அதிர வைத்துள்ளது பிலிப் காரிடோ என்பவர்,ஜேசி டுக்கார்ட் என்ற பாடசாலை மாணவியைக் கடத்தி மறைத்து வைத்து 18 ஆண்டுகளாகப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய கொடூரச் செயல்.

அமெரிக்க மக்களை உறைய வைத்த இந்த வழக்கில் கடந்த மாதம் தீர்ப்பளிக்கப்பட்டது. பிலிப்புக்கு 431 ஆண்டுகள் சிறைத்தண்டனை. உடந்தையாக இருந்த அவரது மனைவி நான்சிக்கு 36 ஆண்டுகள்.

ஒரு பயங்கரவாதக் கனவிலிருந்து மெல்ல மெல்ல மீண்டு வருகிறார் ஜேசி. சமீபத்தில் அமெரிக்க தேசிய தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த இப்பெண், தயக்கமின்றி அனைத்து விடயங்களையும் மனம் திறந்தார்.

1991 ஆம் ஆண்டு ஜூன் 10 அன்று கலிபோர்னியாவின் சவுத் லேக் டாகோ பகுதியில் இருக்கும் தனது வீட்டிலிருந்து அருகில் உள்ள பாடசாலைக்கு நடந்துசென்றபோது கடத்தப்பட்டார் 11 வயது ஜேசி. அது குறித்துக் கூறும்போது, அப்போதைய தனது 'பத்தாண்டு கால வாழ்க்கையில் பயங்கரமான அனுபவம்' என்றார் ஜேசி.

காரிடோ தம்பதியின் வீட்டின் பின்புறத்தில் ஒரு இரகசிய அறையில் அடைத்து வைக்கப்பட்டார் ஜேசி. பிலிப்பால் திரும்பத் திரும்ப பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டார்.

அதன் விளைவாக டீன் ஏஜிலேயே இரு குழந்தைகளுக்குத் தாயானார். அதுவும் தனியாக தனக்குத் தானே பிரசவம் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஜேசி முதல் குழந்தையைப் பெற்றெடுத்தபோது வயது 14. பிரசவம் தனது வாழ்வின் மிகவும் வலி மிகுந்த அனுபவம் என்றபோதும் தனக்கு ஆறுதலாக இருந்தது தன்னுடைய முதல் குழந்தைதான் என்றார்.

எனது பெண் குழந்தை அழகாயிருந்தது. இனியும் நான் தனியானவள் இல்லை என்பதை உணர்ந்தேன். எனக்குச் சொந்தமாக ஓர் உயிர். அதற்கு எதுவும் நேரவிடக்கூடாது என்பதில் நான் உறுதியாக இருந்தேன். எப்படி அவளைக் காப்பாற்றப் போகிறேன் என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால், காப்பாற்றி விட்டேன் என்றார் ஜேசி.

கேள்வி கேட்பாரற்ற பாலியல் கொடுமையை எப்படித் தாங்கிக் கொள்ள முடிந்தது என்று பேட்டியாளர் கேட்டபோது,ஜேசி நிதானமாகக் கூறுகையில்; 'துன்பங்கள் குறித்த 'சுவிட்சை' நான் அவ்வப்போது அணைத்து விடுவதைப்போலக் கற்பனை செய்து கொண்டேன். கடத்தப்பட்டதையும் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுவதையும் நினைத்துக்கொண்டே இருக்க முடியாது. தாக்குப்பிடிப்பது, எப்படியாவது உயிர் வாழ்வதுதான் எனது ஒரே எண்ணமாக இருந்தது' என்றார்.

கடைசியாகத் தான் மீட்கப்பட்டது குறித்து 'நீண்டகாலம் நான் இருளில் மூழ்கிக் கிடந்தேன். கடைசியில் வெளிச்சம் வந்தது' என்றார்.

தனது அனுபவத்தை 'திருடப்பட்ட வாழ்க்கை' என்ற தலைப்பில் நூலாக்கியிருக்கிறார் ஜேசி. தான் பட்ட கஷ்டங்களைப் பட்டவர்த்தனமாக விபரித்திருப்பது தனக்கு மனரீதியான விடுதலையை அளித்திருக்கிறது என்றார் இப்பெண்.

அனுபவித்த கொடுமையை ஏன் திரும்பிப் பார்க்கக்கூடாது? ஒன்றைத் திருப்பி உற்றுப்பார்க்கும்போது அது உங்களைப் பயமுறுத்தாது. இனியும் எனக்குள் எந்த இரகசியத்தையும் மறைத்து வைக்கக்கூடாது என்று நான் நினைக்கிறேன். நான் எதையும் தவறாகச் செய்துவிடவில்லை. இந்த நிலைக்கு நான் எந்த வகையிலும் காரணமில்லை. எல்லாவற்றையும் கொட்டிவிட்டதன் மூலம் மனச்சுமை குறைந்ததாக உணர்கிறேன் என்று முடித்தார் ஜேசி டுக்கார்ட்.



பிலிப் காரிடோ நான்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார மெயிலில் இவர்...




# ஹினா ரபானி ஹர்

பாகிஸ்தானின் வெளிநாட்டு கொள்கையானது முக்கியமானதொரு தருணத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் நிலையில் அந்நாட்டின் வெளி விவகார அமைச்சராக பதவியேற்றிருப்பவர்தான் ஹினா ரபானி ஹர்.

ஆசிய நாடுகளில் முக்கியமான நாடுகளில் ஒன்றாகத் திகழும் பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சராக பெண் ஒருவர் பதவியேற்றிருப்பது இதுவே முதற்தடவையாகும்.ஆக பாகிஸ்தானின் முதலாவது பெண் வெளிவிவகார அமைச்சர் என்ற புகழ் ரபானியைச் சேருகின்றது.

அரசியலில் பெண்களின் ஆதிக்கம் நிறைந்த ஆசியப் பிராந்தியத்தில் மற்றுமொருவர் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

பாகிஸ்தானின் புகழ்பெற்ற பஞ்சாப் மாகாணத்தின் முல்தான் நகரில் 1977 ஜனவரி 19 இல் பிறந்த ரபானியின் தந்தை கலாம் நூர் ரபானி ஹரார் புகழ் பெற்ற அரசியல்வாதியாவார்.

ஆரம்ப மற்றும் பாடசாலைக் கல்வியை தொடர்ந்து லாகூர் முகாமைத்துவ விஞ்ஞான பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான துறையில் பட்டம் பெற்று பின்னர் மசசுசெற்ஸ் பல்கலைக்கழகத்தில் வெளிவிவகாரத் துறையில் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்தார்.

பாகிஸ்தானின் பிரபல வர்த்தகரான பிரோஷ் குல்சரை திருமணம் செய்த ரபானிக்கு இரு மகன்களும் ஒரு மகளும் உண்டு.

இவ்வாறான குடும்பப் பின்னணியை கொண்டிருக்கும் ரபானி 2003 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் மக்கள் கட்சியில் இணைந்துள்ளார்.

இதன் பின்னர் இறுதியாக நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற ரபானி கடந்த 20 ஆம் திகதி பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

34 வயதுடைய ரபானியை உயர்ந்த பதவிக்கு நியமித்துள்ளமை குறித்தும் அவர் ஹோட்டல் முகாமைத்துவத்துறையிலேயே பட்டம் பெற்றுள்ளமை குறித்தும் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றது.

இப்பதவிக்குரிய அனுபவம் ரபானியிடம் இல்லையென பலர் தமது விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் பாகிஸ்தான் வெளியுறவுக் கொள்கையானது நீண்ட காலமாக இராணுவத்தின் தலையீட்டைக் கொண்ட ஒரு துறையாகும் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நாட்டின் வெளிநாட்டு கொள்கையில் இராணுவத்தின் தலையீட்டினை சவால் கொள்வதில் முன்னர் இருந்த வெளிவிவகார அமைச்சர்கள் தோல்வி கண்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் வெளியுறவுக் கொள்கையை ரபானி எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதையோ அல்லது எவ்வாறான மாற்றங்களை வெளியுறவுக் கொள்கையில் அமுல்படுத்தப் போகின்றார் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

தனது குடும்பப் பின்னணி,கல்வித்துறை மற்றும் குறைந்த வயது ஆகியவற்றின் மத்தியில் உயர் பதவி ஒன்றை ரபானி பொறுப்பேற்றுள்ளார்.

பதவியேற்ற மாத்திரத்திலேயே அயல்நாடான இந்தியாவுக்கு முதற்தடவையாக உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ரபானி அங்குள்ள உயர்மட்ட தலைவர்களை சந்தித்து வருகின்றார்.

இந்தியாவுடனான பாகிஸ்தான் நட்புறவு எவ்வாறான நிலையில் உள்ளது என்பதனையும் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினைகள் எவ்வாறான சர்ச்சைக்குள்ளாகியுள்ளதென்பதையும் முழு உலகமுமே அறிந்துள்ளது.

ஆரம்ப காலம் தொட்டே எதிர் நாடுகளாக வாழ்ந்து வரும் பாகிஸ்தான்-இந்தியா முறுகல்களை தணிப்பதற்கு ரபானி மேற்கொள்ளப்போகும் காத்திரமான நடவடிக்கைதான் என்ன?

யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 இல் நிலவில் சீனா

இந்தியாவைப் போல சீனாவும் நிலவைக் குறிவைக்கிறது. 2020 ஆம் ஆண்டுவாக்கில் நிலவில் சீனர் ஒருவரைக் கொண்டு போய் இறக்கத் திட்டமிடுகிறார்கள்.

விண்வெளி நிலையம் ஒன்றையும் அமைக்கத் திட்டமிட்டிருக்கும் சீனா, அந்த நிலையத்தின் ரயில் பெட்டி அளவுள்ள ஒரு பகுதியை இந்த ஆண்டு ரொக்கெட் மூலம் விண்வெளிக்குக் கொண்டு செல்லவிருக்கிறது.



2013 ஆம் ஆண்டில் நிலவின் ஆய்வு வாகனத்தை [ரோவர்] இறக்கி ஆய்வில் ஈடுபடவும் திட்டமிட்டிருக்கிறது சீனா.

அமெரிக்காவின் விண்வெளித் திட்டங்களில் சுணக்கம் ஏற்பட்டிருக்கும் நிலையில், விண்வெளித் துறையில் விறுவிறுப்புக் காட்டுகிறது சீனா. எனவே விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் விடயத்தில் அமெரிக்காவை சீனா முந்திவிடலாம் என்று சில நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

'விண்வெளியில் ஒரு நாடு செலுத்தும் ஆதிக்கம் தான் அதன் திறனுக்கும் சர்வதேச செல்வாக்குக்கும் ஆதாரமாகத் திகழ்கிறது. அமெரிக்கா இதில் பின் தங்கினால், அதன் சக்தியும் செல்வாக்கும் சரிவடைந்ததாகத் தான் தோன்றும்' என்று உஷார்ப்படுத்தியுள்ளார் நாசாவின் இணை நிர்வாகியான ஸ்காட் பிரைஸ்.

நிலவுக்கு மீண்டும் அமெரிக்கர்களை அனுப்ப புஷ் நிர்வாகத்தால் தீட்டப்பட்டு, ஒபாமாவால் கிடப்பில் போடப்பட்ட திட்டத்தின் ஆதரவாளர் இவர்.

அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது விண்வெளித் தொழில்நுட்பத்திலும் அனுபவத்திலும் தற்போது சீனா வெகுவாகப் பின்தங்கியிருக்கிறது. ஆனால், திட்டங்களோ, அதை நிறைவேற்றத் தேவையான நிதியோ சீனாவுக்குப் பிரச்சினையில்லை என்கிறார்கள் நிபுணர்கள்.

அமெரிக்காவின் விண்வெளித் திட்டங்கள் நிதிப் பிரச்சினையாலோ,ஆட்சி மாற்றத்தாலோ முடங்கிப் போகலாம். ஆனால் அந்த மாதிரித் தடைகள் எதுவும் சீனாவுக்கு இல்லை என்று கருதப்படுகிறது.

'சீன அமைப்பிலுள்ள ஒரு பெரிய வசதி, அவர்கள் ஐந்தாண்டுகளுக்குத் திட்டம் போடுகிறார்கள். அதன் அடிப்படையில் அவர்களால் கிடுகிடு வென்று முன்னேறிவிட முடியும்' என்கிறார் விண்வெளி நிபுணர் பீட்டர் பாண்ட்.

பூமியில் மட்டுமன்றி விண்வெளியிலும் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே போட்டி தொடங்கி விட்டது.

# தனக்குத்தானே பழுது நீக்கும் இதயம்



இதயம் தனக்குத் தானே பழுது நீக்கிக்கொள்ளும் முறையை இங்கிலாந்து ஆய்வாளர் பால் ரைலி கண்டுபிடித்துச் சாதனை படைத்துள்ளார்.

இதுதொடர்பாக எலியின் இதயத்தில் அவர் ஆய்வு செய்துள்ளார். அதில் ஸ்டெம் செல்லை இடம் மாற்றம் செய்வதன் மூலம் சேதம் அடைந்த செல்கள் தாங்களாகவே தங்களைச் சீர்படுத்திக் கொள்ளச் செய்ய முடியும் என்று நிரூபித்துள்ளார்.

இந்த ஆய்வு ஆரம்ப கட்டத்தில்தான் உள்ளது. இதை மனிதர்களுக்கு நடைமுறைப்படுத்தச் சில ஆண்டுகள் ஆகலாம் என்றபோதும் இது மிக முக்கியமான கண்டுபிடிப்பாகும். எதிர்காலத்தில் மாரடைப்பு போன்றவற்றால் இதயத்தில் பாதிப்பு ஏற்படும்போது இம்முறை மூலம் அதைச் சீர்படுத்தலாம். அதற்கான தூண்டுதலுக்காகவும், ஒழுங்குபடுத்துவதற்காகவும் சிறிது மருந்து எடுத்துக்கொண்டால் போதும்.

தற்போது மருத்துவத் துறையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தால் மாரடைப்பால் இறப்போரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒக்சிஜன் பற்றாக்குறையால் இதயத்திசுக்கள் இறந்தால் அதைச் சரிசெய்யமுடியாத நிலையே இன்றும் இருக்கிறது.

இறந்த செல்களின் அளவு அதிகரிக்கும்போது உடம்புக்குப் போதுமான ரத்தத்தைச் செலுத்த முடியாமல் இதயம் செயலிழக்கிறது.

பாதிக்கப்பட்ட திசுக்களை உயிர்ப்பிக்க தற்போது விஞ்ஞானிகள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால், இப்போதைக்கு இதயம் செயலிழக்கும் நிலையை அடைந்தவர்கள் செயற்கை உபகரணத்தையோ, மாற்று இதயத்தையோ தான் நம்பியிருக்க வேண்டியுள்ளது.

அதற்குப் பதிலாக பாதிக்கப்பட்ட திசுக்கள் மீண்டும் தாங்களாகவே சரிசெய்யும் முயற்சியில்தான் ஆய்வாளர் ரைலியின் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். இதுதொடர்பாக இதயத்தின் வெளி அடுக்கான பெரி கார்டியத்தில் காணப்படும் குறிப்பிட்ட செல்களை அவர்கள் தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றனர்.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# அமெரிக்காவின் கணினி சாதனை

உலகின் அதிவேக கணினியை தயாரிக்கும் முயற்சியில் அமெரிக்கா வெற்றிபெற்றுள்ளது. இந்த மடிக்கணினியை அமெரிக்க ஆயுதங்கள் பரிசோதனை மையம் தயாரித்துள்ளது. 1000 ட்ரில்லியன் நடவடிக்கைகளை இந்த சாதனைக் கணினி ஒரே வினாடியில் செய்து முடிக்கும் வல்லமை கொண்டது.

அமெரிக்க எரிசக்தி துறையும் ஐ.பி.எம்.மும் இந்த சாதனை கணினி அறிவிப்பை வெளியிட்டது. ரோட் ரன்னர் என்று பெயரிடப்பட்ட இந்த கணினி அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் கையிருப்பைப் பராமரிக்கவும், உலக எரிசக்தி நெருக்கடிகளைத் தீர்க்க உதவவும், மேலும் பல அடிப்படை ஆராய்ச்சிகளுக்கு உதவவும் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

# எயிட்ஸ் நோய்க்கு மருந்தாகும் புகையிலை



புகையிலை சார்ந்த பொருட்களை பயன்படுத்த வேண்டாம். நீண்ட காலம் புகைபிடிக்கும் பழக்கம் இருந்தால் சுவாசப் பிரச்சனையுடன் புற்றுநோயும் வரும் என மருத்துவர்கள் எச்சரித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் மாற்றம் செய்யப்பட்ட புகையிலை மருந்தாகவும் பயன்படுகிறது என ஆய்வாளர்கள் கண்டறிந்து உள்ளனர். எச்.ஐ.வி.எயிட்ஸ் போன்ற ஆட்கொல்லி நோய் தவறான பழக்க வழக்கங்களினால் வருகிறது.

சிறிய குழந்தைகளுக்கும் தவறான ஊசி முறையால் இந்த நோய் பாதிப்பு ஏற்படுகிறது. எச்.ஐ.வி.பாதித்த நபர்களின் ஆயுட்காலம் எண்ணப்படுகிறது என்ற அச்சுறுத்தல் இருந்தாலும் அந்த நோய்க்கும் புதிய சிகிச்சை அளிக்க மருந்து தயாராகிறது.

இந்த மருந்து புகையிலையில் இருந்து தயாரிக்கப்படுகிறது. என்பது ஆச்சரியமான விடயம். தற்போதைய மருந்துகள் பாலூட்டி செல்கள் மூலம் தயாரிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் எச்.ஐ.விக்கு புகையிலையில் மருந்து தயாரிக்கும் ஆரா[illegible] செயின்ட் ஜார்ஜஸ் பகுதியை சார்ந்த பேராசிரியர் தலைமையிலான குழு வெற்றி கண்டுள்ளது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட புகையிலை மூலம் மருந்து தயாரிக்க ஆகும் செலவு தற்போதைய மருந்தை காட்டிலும் 100 மடங்கு குறைவாகும். 2008 ஆம் ஆண்டு முடிவில் 15 வயதுக்கு மேற்பட்ட 83 ஆயிரம் பேருக்கு பிரிட்டனில் எச்.ஐ.வி.பாதிப்பு இருந்தது தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# தொழில்

உமா கல்யாணி

என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.மாறி விடலாம் என்று தான் பார்க்கிறேன். ஆனால், என்ன முயன்றும் முடியாமல் தவிக்கிறேன்.

காரணம் என் சூழ்நிலை அப்படி. என் சிரித்த முகம் கண நேரத்தில் இறுகிப்போகிறது. எனக்குள் அதுவரை இல்லாத கோபம் எட்டிப் பார்க்கத் தொடங்கி விடுகிறது.

கொஞ்சக்காலத்துக்கு முன்பு வரை என் உறவுக்காரர்கள் அத்தனைபேரும் என்னிடம் பார்த்தது என் சிரித்த முகத்தைத்தான். இப்போது அவர்கள் கூட என் கடினமுகம் பார்த்து என்னிடம் நெருங்கத் தயங்குகிறார்கள்.

முன்பெல்லாம் எனக்கு எதிர்ப்படுகிறவர்கள் சிநேகச் சிரிப்பை உதிர்ப்பார்கள்.இப்போது நிலைமை அப்படியே தலைகீழ். என்னை தூரத்தில் பார்த்தாலே தங்கள் பாதையை மாற்றிக்கொண்டு தப்பிப்பதுபோல் ஓட்டம் பிடித்து விடுகிறார்கள்.

இன்னும் சிலர் வேண்டாத பார்வை பார்க்கிறார்கள். நின்று பேசவே தயங்குகிறார்கள். மிகவும் வேண்டியவர்கள் பட்டியலில் இருந்தவர்களில் ஒரு சிலர் மட்டும் வேறு வழியேயின்றி என்னை சந்திக்க நேர்ந்தால் அட்வைஸ் பண்ணுகிறார்கள்.எப்படியிருந்த நீ இப்படி ஆயிட்டே... நீதான் இதெல்லாம் செய்கிறாய் என்பதை இப்போதும் எங்களால் நம்ப முடியவில்லை என்று அவர்கள் சொல்லும் போது எனக்குள்ளும் ஒரு வித கவலை எட்டிப்பார்க்கவே செய்யும்.ஆனால் இந்த கவலைக்கு வயது 'ஒரு நாள்'தான்.மறுநாளே நான் சூழ்நிலைக் கைதியாகி கத்திக் கதறி ஆர்ப்பாட்டம் செய்யும்போது உறவுக்காரர்களிடம் இருந்து விலகியே போகிறேன் என்பதை உணர முடிகிறது.

இப்படியே போனால் சிரிப்பையே மறந்துவிட வேண்டிவருமோ என்று ராத்திரி தூங்கும் நேரத்தில் கூட சிந்திக்கத் தொடங்கி விட்டேன். அப்படி சிந்திப்பதால் தூக்கமும் சரிவர இல்லாமல் போய் முகமும் சோபையிழந்தது போலாகி விட்டது.

போனவாரம் இப்படித்தான் ஒரு ஷொப்பிங் கொம்ப்ளக்சில் என் தூரத்து உறவுக்காரப் பெண்ணை எதிர்பாராமல் சந்தித்தேன். அவள் எப்போது நகரத்துக்கு வந்தாள் என்பதும் எனக்கு சொல்லப்படவில்லை.

ஊர்க்காரப் பெண்ணை சந்தித்த மகிழ்ச்சியில் நேராக அவளை நெருங்கினேன்.அவள் என்னை அப்போதுதான் கவனித்திருப்பாள் போலும்! உடனே திகைத்து, திடுக்கிட்டவள் என்னை பார்க்கவே விரும்பாதவள் போல் அந்த கூட்டத்தில் கலைந்து காணாமல் போய் விட்டாள்.

அப்போது தான் என் மீதே எனக்கு கோபம் வந்தது. 'ச்சே...என் தொழில் இதையுமா பண்ணி வைக்கும்?'

ராத்திரி என் வருமானத்தை கைகொள்ளாமல் எண்ணி சரிபார்த்துக் கொண்டிந்த என் கணவரிடம் 'முடியலீங்க. என்னால் முடியலீங்க. வெளியில தலைகாட்ட முடியலை. யாரைப்பார்த்தாலும் முறைக்கிறமாதிரி தோணுது. எனக்காக நீங்களாவது வசந்தனுக்கு போன் போடுங்க' என்றேன். வழக்கமாக நான் இப்படிச் சொன்னால் வருமானத்தை மனதில் உத்தேசித்து என்னை சமாதானப் படுத்தும் என் கணவர்.இம்முறை ராத்திரி முழுக்க படுக்கையில் தூங்காமல் புரண்டு கொண்டிருக்கும் என் நிலையை உத்தேசித்து போன் போட்டார். எதிர்முனை 'வசந்தன்' என்றது. உடனடியாக நான் கணவரிடம் இருந்த போனைப் பிடுங்கினேன்.



''சார்...நான் தான் பிரேமா! என்னை மன்னிச்சிடுங்க.உங்கள் மூலமா என்னால் கைநிறைய சம்பாதிக்க முடியுதுங்கிறது உண்மைதான். அந்த நன்றியை நான் மறக்கலே. ஆனால், இதையே பண்ணிக்கிட்டிருந்தா என் சொந்தக் குடும்பம் கூட எனக்குத் தூரமாயிடும் போல் இருக்கு.அதனால என் வேடம் மாறுவது உங்க கையில்தான் இருக்கு. ரொம்ப புண்ணியமாகப் போகும் சார்...'' என்றேன்.

அந்த வசந்தன் தொலைக் காட்சித் தொடர் இயக்குநர் சிரித்தார்.

''பிரேமா... என்னாச்சு உனக்கு? இன்னிக்கு நம்ம வளர்மதி தொடரை இலட்சக்கணக்கான ரசிகர்கள் பார்த்து ரசிக்கிறாங்கன்னா அதுக்கு உன்னோட வில்லித் தனமான நடிப்புத்தான் பிரதான காரணம். ஒரு நடிகையா உன்னோட நடிப்புக்கு உன் உறவுக்காரங்கள் வரை உன்கிட்ட ஒட்ட தயங்குறாங்கன்னா அதை உன் வில்லி நடிப்புக்கு கிடைச்ச வெற்றியா மட்டும் பார்த்துக்க பழகிக்க. சரியா?''

''சரி சார்'' என்றேன். இன்னமும் என் இன்றைய சம்பளத்தை எண்ணிக் கொண்டிருந்த என் கணவரைப் பார்த்தபடி.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகள்

கடலலைகள் எமை
கைதட்டி கூப்பிட்டும்
உன் கையை
பற்றி நான்
நடந்து வந்த
வேளையில்
அலைகள் மட்டும்
கால்களை நனைக்
காமல்
இருந்திருந்தால்
நினைவுகள் இன்றி
நாளும் கடந்திருக்கும்

பேருந்து நெரிசலில்
எட்டாத தூரத்தில்
நீயிருந்தும்
நெருங்கியேயிருந்த
எம் பார்வைகள்
எதிர்பார்த்த
நேரத்திற்குள்
உதயமாகாத உன்
வரவால்
மலராயிருந்து
மொட்டாகிய என்
முகம்

தலையணைக்கு
என்
தலை சுமையாக
வும்
உனைப் பற்றிய
எண்ணங்கள் என்
தலைக்கு சுமையா
கவும்
விழித்திருந்தே
விடிந்து விட்ட
இரவுகளும் என்
வாழ்வில் இன்னும்
கறுப்புப் பக்கங்
களாகவே!

**பா.ரிசாந்**
**தன்-ஹொப்டன்**

# இரத்தவலி

கைநழுவிய ஒன்றுக்கு
கூட கலங்கிடாத
என் மனம்...ஏனே?
இன்று ஏங்கித் தவிக்கிறது?

இலட்சியமே
பூச்சியமாகி போயும்
இம்சைப் பட்டுக் கொள்ள
என் இதயம்...

இரட்டிப்பாய்
துடிக்கிறது
இரவு,பகல்
பாராமல்...
இனம் புரியாத
நெருடல்களோடு...!

ஏன் என்று
எனக்குத் தெரியாது...!

அவள் அபகரித்துப்
போனது -என்
உள்ளம் என்பது

என் இதயத்துக்கு
மட்டுமே தெரிந்ததால்
இரத்தத்தின் வலிகள்
தாங்காது தவித்துக் கொள்கிறது!

# சுமை தரும் சுகம்

காசுக்காக
அவள் தந்த காதல்
மதுவில் போதை ஏறி
அவர்கள் பேதலிப்பதாக
நினைப்பு...!

ஆனால் அது...
காதல் போதையல்ல
காம விசம் என்பதை
உணர்கையில்
கறையான் அரிப்பது
போல் இவர்கள் வாழ்வும்
அரிக்கப்பட்டு...
எல்லாமே

எல்லைக் கோட்டை
அடைந்து விடுகின்றது...
அவள் ஊமை
தீவிரவாதி...!

உயிர்க்கொல்லி
எச்.ஐ.வி.யைப்
பரப்பும் பயங்கரவாதி!
என்ற உண்மையை
உணர்கையில்...!

**பரகடுவ, கே.எம்.சம்ஸ்**




# மாற்றம்

ஏழையின்
வாழ்விலும்
ஏற்றமுண்டு
தாழ்ந்தோர் நாம்
வாழ
வழியுமுண்டு
அஸ்தமனங்கள் முடி
வாகா
அவை நாளை விடி
வாகும்
வீழ்ந்த அருவி
எழுவதுபோல
பட்டமரம் துளிர்ப்ப
துபோல
உன் வாழ்வு
வளம் பெறும்.

**கந்த.ஞானமுத்து**
**கைதடி மேற்கு-02**

# உயிர்ப்பூ

காகம் வளர்த்த
குயில் குஞ்சுகள்
சத்தமிட்டு முடிய

குயில்கள் கூவ
காகங்கள்
கரைய

குழந்தைகள்
அம்மா அப்பாவை
கைநீட்டி
தொட

சூரியன்
கிழக்கிலிருந்து
கிளம்புவான்

கதிரவன்
ஒளிபட்டு
பூக்கள் எல்லாம் பெரு
மகிழ்ச்சியில்
மலரும்

அழகை
அலங்கரிக்கும்

மக்கள் எல்லாம்
விழித்து
தத்தம் கடமைகளை
செய்ய

உலகம்
உயிர்ப்பூ
காண்கிறது

பெருமகிழ்ச்சியில்
திளைப்பூ
காண்கிறது

ஓர் உலகம்
இணைப்பூ
காண்கிறது

# எழுத முடியவில்லை

கவிதை எழுதிவிட
கடதாசி எடுத்தேன்
பேனா பிடித்தபோது
கை நடுங்கியது

காதல்க் கவிதை
எழுத நினைத்தேன்
முடியவில்லை
காதலியும் இல்லை

போர் தந்த
அவலம் எழுத
நினைத்தபோது
சிவந்த மை பேனா
என்னிடம் இல்லை

இயற்கையை பாட
எண்ணியபோது
முடியவில்லை
சுனாமி
வந்துவிட்டது

எதுவும்
எழுத முடியவில்லை

**ஆ.முல்லைதிவ்யன் ,பொலிகையூர்**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைப்படாத பெற்றோர்



எனக்கு உங்கள் மகன் மாதிரி ஒரு மகன் இருக்கவேண்டும் என்று ஆசையாயிருக்கு. இந்திய கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட்டின் பெற்றோரைச் சந்தித்த இங்கிலாந்து கிரிக்கெட் ஜாம்பவான் கொலின் கவுட்ரி இப்படித்தான் கூறினார்.

ஆனால்,டிராவிட்டின் தாய்-தந்தை தங்களை பெருமைக்குரிய பெற்றோராகத் தம்பட்டம் அடித்துக்கொள்வதில்லை.

சந்தோஷமும் திருப்தியும் மிக்க பெற்றோர் என்று தான் எங்களைக் கூறுவேன்.ராகுல் (டிராவிட்) மாதிரி ஒரு மகனைப் பெற்ற விதத்தில் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள் என்கிறார்.பெங்களூரில் தனது வீட்டில் ரிலாக்ஸாக அமர்ந்திருக்கும் சரத்,ராகுல் டிராவிட்டின் அப்பா அவருக்கு 77 வயது.

ராகுல் டிராவிட்டின் தாய் புஷ்பா.அவன் படிப்பையும் விளையாட்டையும் பெலன்ஸ் பண்ணிக்கிட்டதுதான் முக்கியமான விடயம்.தடகளம்,கால்பந்து,பெட்மிண்டன்,ஹொக்கி என எல்லாமே டிராவிட் நல்லா விளையாடுவான்.இந்த விளையாட்டுகளில் எல்லாம் பள்ளி சார்பிலும் விளையாடினான்.ஆனால்,படிப்பில் எப்போதும் பெஸ்ட் கிளாஸ்தான்.

ராகுல் டிராவிட்டின் கிரிக்கெட் வாழ்வில் கப்டன் பொறுப்பு வகித்ததுதான் கடினமான காலம். 2007 ஆம் ஆண்டு உலகக்கோப்பை போட்டியில் இந்திய அணி ஆரம்ப கட்டத்திலேயே வெளியேற கூரிய விமர்சன அம்புகள் குத்திக் கிழித்தன.

டிராவிட்டுக்கு நல்ல மனவலிமையுண்டு.அந்தக் காலகட்டத்தில் சில பேர் கூக்குரல் எழுப்பினார்கள். ஆனால், நாங்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை என்று சாதாரணமாகக் கூறுகிறார் சரத்.

உலகக் கோப்பையில் தோற்றால் யாருக்குமே வருத்தமிருக்கும்.ஆனால், ரர்குல் தனது கப்டன் பொறுப்பில் தொடர்ந்தது குறித்து நான் சந்தோஷப்பட்டேன்.காரணம் யாராக இருந்தாலும் அந்தச் சூழலில் இனியும் தொடர்ந்து நான் ஆட விரும்பவில்லை என்று கூறிவிடுவார்கள்.ஆனால் ராகுல் அப்படிச் செய்யவில்லை.மாறாக 1986 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியா,இங்கிலாந்தில் தனது முதல் தொடரை வெல்ல உதவினார் என்கிறார் சரத்.



ஒரு கப்டனாக அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்ற ராகுல் டிராவிட் சட்டென்று கப்டன் பதவியைத் துறந்து எல்லோரையும் ஆச்சரியப்படவைத்தார்.

அதற்கான காரணத்தை அவன் என்னிடம் கூட கூறவில்லை. அப்போதைய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியச் செயலாளர் சரத்பவாரைச் சந்திப்பதற்காக டில்லி செல்லு முன் என்னிடம் வெகு இயல்பாக நான் கப்டன் பொறுப்பிலிருந்து விலகப் போகிறேன் என்றார்.ராகுலின் முடிவில் எனக்கு உடன்பாடில்லை என்று சரத் கூறுகிறார்.

ராகுல் டிராவிட்டின் பொறுமை,நடப்பு வெஸ்ட் இண்டீஸ் தொடரின் முதல் டெஸ்ட் உட்பட பல போட்டிகளில் இந்தியாவை தோல்வியின் பிடியிலிருந்து காப்பாற்றியிருக்கிறது அதன் இரகசியம்.

ராகுல் அவங்கம்மாவிடம் இருந்து பெற்ற முக்கியமான விடயம் பொறுமை.அது அவனுக்கு நிறையவே இருக்கிறது.ராகுல் அம்மா ஓர் ஓவியர் என்பதால் பொறுமை ரொம்பத் தேவைப்படும்.அதுதான் ராகுலின் ஆட்டத்திலும் பிரதிபலிக்கிறது என்று முடிக்கிறார் சரத் டிராவிட்.

# திருடிய பிரபலம்



சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக சிறுவயதிலே திருட்டுத் தொழிலில் ஈடுபடும் சிறுவர்கள் இளைஞர்களான பின்பும் தொடர்ந்தும் திருட்டுத் தொழிலை மேற்கொண்டு காலப்போக்கில் மனம் திருந்துவதோடு அதற்குப் பதிலாக மக்களுக்குப் பல நன்மைகளையும் செய்வர். 1707 ஆம் ஆண்டில் பிறந்த கிளாட்கிரே பில்லன் என்பவர் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவர். இவர் சிறுவயதிலேற்பட்ட வறுமையின் காரணத்தால் பல இடங்களில் திருடத் தொடங்கினார். திருட்டுத் தொழிலை மேற்கொண்ட இவர் சிறைத் தண்டனைக்கும் ஆளானார். பின்பு மக்களின் ஒழுக்கத்தைக் கெடுக்கக்கூடிய ஆபாசமான புத்தகங்களை எழுதினார்.அதன் பேரிலும் சிறைத் தண்டனை பெற்றார்.

அத்தோடு நிற்காமல் நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் சில செயல்களிலும் ஈடுபடவே, ஐந்து ஆண்டுகள் நாடு கடத்தப்பட்டார்.நாடு கடத்தப்பட்ட போதுதான், தான் செய்த தவறுகளையெல்லாம் உணர்ந்தார். திருட்டுத் தொழில், வழிப்பறி, பிட்பொக்கெட், ஆபாசமான புத்தகங்கள் விற்றது. நாட்டிற்குத் தீங்கு விளைவித்தது என அனைத்தையும் எண்ணி வருந்தினார்.

'இனிமேல் இதுபோன்ற தவறான தொழில்களைச் செய்யக் கூடாது. நேர்மையான தொழில் செய்ய வேண்டும்.அதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டும் என்று உறுதி கொண்டார். சிறுவயதில் படிக்கத் தவற விட்ட கல்வியைத் தொடர்ந்தார். பட்டங்கள் பல பெற்றார்.

வேலை நிமித்தமாக பல்வேறு பதவிகளுக்கு நேர்முகத் தேர்விற்குச் சென்றார். அதில் தணிக்கைச் சபையில் நீதிபதியாக தெரிவானார். பிரெஞ்சு நாடே போற்றும் அளவிற்குப் புகழ் பெற்றார் பில்லன். திருடனாகவும் ஆபாசப் புத்தகங்களை எழுதுபவராகவும் இருந்த பில்லன், பேரும் புகழும் பெற்றதற்கு திருந்திய மனமும் விடாமுயற்சியும், கடுமையான உழைப்புமே காரணம். 'தவறு செய்தவன் திருந்தியாகணும், தப்பு செய்தவன் வருந்தியாகணும்! நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி, இந்த நாடே இருக்குது தம்பி! என்ற கருத்தை உணர்த்தும் பாடலை நினைவூட்டி தன்னைப் போல எல்லோரும் திருந்தி வாழ்வில் உயர வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திருந்தி வாழ்ந்த பில்லன், 1777 ஆம் ஆண்டு மரணமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக்கிற்கு இன்னும் ஓராண்டு






## 2012 LONDON

லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க ஓராண்டு இருக்கும் நிலையில் அதைக் குறிக்கும் விதமாகப் பல்வேறு நிகழ்வுகள் லண்டன் நகரில் நடைபெறுகின்றன.

ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் திட்டமிட்டபடி சரியான பாதையில் சென்று கொண்டிருக்கின்றன எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

எனினும் இன்னும் பல அரங்குகளில் பெரியளவில் பணிகள் முடிவுறாமல் உள்ளன என்றாலும் இதுவரை சாதிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து தாங்கள் பெருமை கொள்வதாக லண்டன் ஒலிம்பிக் குழுவின் தலைவர் செபஸ்ரின் கோ தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் மேட்டுக்குடி மக்களின் ஒரு ஊதாரித்தனம் என்றும் முதலில் எதிர்பார்த்து திட்டமிடப்பட்டதை விடச் செலவினங்கள் பல மடங்கு உயர்ந்து 15 பில்லியன் டொலர்களை அடைந்துள்ளதென்று விமர்சகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

லண்டனிலுள்ள ட்ரபால்கர் சதுக்கத்தில் இடம்பெறும் ஒரு தொலைக்காட்சி நிகழ்வில் சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் ஜாக் ரக்கர் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள விளையாட்டு வீரர்களை வருமாறு முறையான ஒரு அழைப்பைவிடுப்பார்.

அதேபோல அலைகள் வடிவில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளத் திறப்பு விழாவைக் குறிக்கும் வகையில் பிரிட்டனின் வீரர் டாம் டேலி டைவிங் பலகையிலிருந்து நீரினுள் குதிப்பார்.

# வீராங்கனைகளுக்கு 'பிரா'

விளையாட்டு வீராங்கனைகளுக்கு வரப்பிரசாதமாக கவர்ச்சியை தடுக்கும் வகையிலான புதிய வகை பிராவை இங்கிலாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

விளையாட்டு வீராங்கனைகள் அணியும் பொறுத்தமற்ற ஆடைகளால் சில நேரங்களில் ஆபாசமாக தெரிகின்றனர். அதுவும் டென்னிஸ் போன்ற போட்டிகளில் வீராங்கனைகள் கடும் சர்ச்சையில் சிக்கியதும் உண்டு. குறிப்பாக அவர்கள் அணியும் உள்ளாடைகள்தான் பெரும் சிக்கலை ஏற்படுத்துகின்றன. இதைத்தடுக்கும் வகையில் புதிய விளையாட்டு பிரா ஒன்றை இங்கிலாந்து விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.

இந்த புதிய வகை பிராவில் உள்ள கோப்பை அமைப்பு, அணிந்திருப்பவரின் மார்பகத்தோடு ஒட்டிக் கொள்கிறது. இதனால் அவர் எந்த திசைக்கு திரும்பினாலும் மார்பகங்கள் குதிக்கும் நிலை ஏற்படுவதில்லை. இதனால் ஆபாசம் அடியோடு கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் இந்த ஆடையில் உள்ள பிரத்தியேக அமைப்பு அணிந்திருப்பவர் குதிக்கும் போதும் மார்பகத்தின் அசைவை குறைக்கிறது.



விளையாட்டு வீராங்கனைகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய இந்த வகை பிரா கடந்த மூன்று ஆண்டுகளாக நடந்த ஆராய்ச்சியின் முடிவில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய வகை பிரா 5 சைஸ்களில் வரும் அக்டோபர் முதல் விற்பனைக்கு வர உள்ளது. இதன் விலை 35 யூரோக்கள்.

# ஒலிம்பிக்கில் கபடிக்கு வாய்ப்பு

வருங்காலங்களில் ஒலிம்பிக் போட்டியில் கபடி இடம்பெற வாய்ப்புள்ளதாக அர்ஜுனா விருது வென்ற இந்திய கபடி வீரர் சி. ஹொன்னப்ப கௌடா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் நிகழ்ச்சியில் அவர் பேசுகையில்;

''கபடி முன்பு கை, கால்களில் பலத்தகாயங்களை ஏற்படுத்தக் கூடிய விளையாட்டாக இருந்தது. ஆனால், இப்போது தொழில்நுட்பம் சார்ந்த விளையாட்டாக மாறிவிட்டது. கபடியில் இப்போது இந்தியா முதலிடத்தில் உள்ளது. ஐரோப்பிய நாடுகளும் இப்போது அதிகளவில் கவனம் செலுத்தி வருகின்றன.



அந்த நாடுகள் உள்விளையாட்டு அரங்கு, செயற்கை ஆடுகளம் போன்றவற்றுடன் தயாராகி வருகின்றன. எனவே, வருங்காலங்களில் ஒலிம்பிக் போட்டியில் கபடியை சேர்க்க வாய்ப்பிருக்கிறது.

இந்தியாவில் கபடி விளையாடுபவர்களுக்கு வேலை கிடைக்கிறது. ஆனால், திறமையான விளையாட்டு வீரர்கள் இல்லை என்பது தான் உண்மை. தென்னிந்தியாவில் தமிழகம், கேரளத்தில்தான் அதிகளவில் கபடி விளையாடப்படுகிறது.

கர்நாடகத்தில் 6 மாதங்களுக்கு முன்பு கபடிப் பயிற்சி அக்கடமி தொடங்கப்பட்டது. இதில், திறமையான வீரர்கள் 10 பேருக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. எந்தத் துறையாக இருந்தாலும், நம்முறைய முழுத் திறமையை வெளிப்படுத்தினால் வெற்றிபெறலாம்.

இந்திய கபடி அணி சிறப்பாக இருந்தாலும் அடுத்த 10 ஆண்டுகளில் கடும் நெருக்கடியைச் சந்திக்கும் சூழ் நிலை உள்ளது. சர்வதேசப் போட்டிகளுக்கு இணையான செயற்கை ஆடுகளம், உள் விளையாட்டரங்கு போன்றவை இந்தியாவில் இல்லாததே அதற்குக் காரணம். எனவே, இந்த வசதிகளைப் பரவலாக ஏற்படுத்த வேண்டும்'' என்றும் கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்பார்த்த தோல்வி




இந்திய-இங்கிலாந்து டெஸ்ட் தொடர் என்று ஊடகங்கள் பல்வேறு விதமாக இதனை ஊதிப் பெருக்கக் கடைசியில் இந்திய அணி இங்கிலாந்திடம் சரணடைந்ததுதான் நடைபெற்றது.ஒரு கிரிக்கெட் பார்வையாளராக யோசிக்கும் போது இந்தத் தோல்வி எதிர்பார்க்கப்பட்டதே.

முக்கியமான டெஸ்ட் தொடருக்கு முன்பான திட்டமிடுதல்,கடுமையான முன் தயாரிப்புகள்,தொடர் பற்றிய சிந்தனை எதுவும் இந்திய அணி வீரர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. இதைத்தான் நாசர் ஹுசைனும் கூறியுள்ளார்.

ஆனால் இங்கிலாந்து அணி கடந்த 2 அல்லது 3 ஆண்டுகளாக ஸ்ட்ராஸ் தலைமையில் டெஸ்ட் தொடர்களை தங்களது அபாரமான பந்து வீச்சு,துடுப்பாட்டம் ஆகியவற்றால் வெற்றி பெற்று தன்னம்பிக்கையான மனோ நிலையில் களமிறங்கியது.மேலும் நல்ல முன் தயாரிப்பும் செய்திருந்தது.

மாறாக இந்திய அணியில் முக்கிய பந்து வீச்சாளராக சகீர் கான் ஐ.பி.எல்.இற்குப் பிறகு காயமடைந்து ஜனவரிக்குப் பிறகு சீரியஸ் கிரிக்கெட் எதிலும் விளையாடவில்லை.

நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் மேற்கிந்திய தொடரிலிருந்து விருப்ப ஒய்வு பெற்றார்.டெஸ்ட் போட்டிகளில் முதல் நாளில் நன்றாக வெளுத்து வாங்கும் சேவாக்கை ஐ.பி.எல்.கிரிக்கெட்டில் இழந்தது இந்திய அணி.

ஏகப்பட்ட காரணங்களை இந்திய தோல்விக்கு அடுக்கினாலும் இத்துடன் இந்தத் தொடர் முடிந்துவிடவில்லை.இந்தியா மீண்டு வந்து இங்கிலாந்தை வெல்லும் என்றெல்லாம் பேசி சமாதானம் செய்து கொண்டாலும் இந்தத் தொடரில் அது போன்ற மீள் எழுச்சி இருக்குமா என்பது ஐயமாகவே உள்ளது.

டோனி களத்தடுப்புக்கான களம் அமைப்பதில் சற்றே டெஸ்ட் போட்டிகளின் தன்மைக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள வேண்டும்.ஸ்ரீநாத் பந்து வீசும்போது 'ஷோட் லெக்' இல்லாமல் வீச மாட்டார்.இஷாந்த் ஷர்மா ஸ்ரீநாத் போன்ற ஒரு இன்ஸ்விங் பந்து வீச்சாளர்தான்.அவருக்கு 'ஷோட் லெக்' இல்லாமல் வீசியதால் முதல் இனிங்சில் பீற்றர்சன் 20 ஒட்டங்கள் எடுக்கும் முன்னரே ஆட்டமிழக்கும் வாய்ப்பை இந்தியா இழந்தது. 'ஷோட் லெக்' கில் எளிதான கேட்ச் ஒன்று சென்றது.ஆனால் அங்கு களத்தடுப்பாளர் இல்லை. அதன் பிறகு பீற்றர்சன் 200 ஒட்டங்களை பெற்றார்.

இரண்டாவது இனிங்சில் இஷாந்த் ஷர்மா தனது லெந்தைக் கண்டுபிடித்துக் கொண்டார்.ஆனால் அவரால் உணவு இடைவேளைக்குப் பின்னால் பந்து வீச முடியவில்லை.காரணம் களைப்பு. இதுவும் நியாயமானதே.

ஆனால் இதுபோன்ற தருணங்களில் 400 விக்கெட்டுக்களைக் குவித்த ஹர்பஜன் சிங் தனது முழுத் திறனுடன் பந்து வீசியிருக்க வேண்டும்.பந்துகள் திரும்புவேனா என்று அடம்பிடித்தது.நாம் எவ்வளவு ஓரமாக நின்று தொலைக்காட்சியில் பார்த்தாலும் ஹர்பஜன் பந்துகள் மருந்துக்குக் கூட திரும்பியதாகத் தெரியவில்லை.ஹர்பஜன் சிங்கின் டெஸ்ட் இடத்தை உத்தரவாதமாக அவருக்கு அளித்து விட்டார்களென்றே தோன்றுகிறது.

பந்து வீச்சு இப்படியிருக்கிறது என்றால் ஏன் அவரைத் தேர்வு செய்ய வேண்டும்?அதுதான் ஆடுகளம்,சூழ்நிலை போன்றவற்றை கணக்கில் கொள்ளாமல் பெயரின் பின்னால் செல்கிறார்கள்.அமித் மிஷ்ரா அல்லது ஸ்ரீசாந்த் இருந்திருந்தால் ஹர்பஜனை விட சிறப்பாக வீசியிருப்பார்கள் என்றே தோன்றுகிறது.

ஆனால் இந்த டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்டம் தான் தோல்விக்கு காரணம்.முதல் இனிங்சில் எப்போதும் லக்ஷ்மண் சோடை போகிறார்.சச்சின் டெண்டுல்கரும் சோடை போகிறார்.சரி இரண்டாவது இனிங்சிலாவது போட்டியை தோல்வியிலிருந்து காப்பாற்றினார்களா? அதுவும் முடியாமல் போனது.

சச்சின் டெண்டுல்கர் தன்னம்பிக்கையுடன் அடித்து ஆடியிருந்தால் ஆட்டமிழந்திருக்க மாட்டார்.புரோட் பந்தை நேராக காலில் வாங்கி தப்பித்தார்.அது அவுட்டானாலும் நடுவரால் பிழைத்தார்.அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவர் நின்றிருக்கலாம்.ஆனால் அவர் உணவு இடைவேளைக்குப் பிறகு 40 பந்துகளில் ஒரு ஒட்டம் எடுத்தார்.இது எதிரணியினரின் கைகளில் போய் விழும் துடுப்பாட்ட உத்தியாகும்.ரெய்னா இவரை விட மிகவும் எளிதாக விளையாடினார்.

வர்ணனை அறையிலிருந்த சௌரவ் கங்குலியே சச்சின் ஆட்டத்தை விமர்சனம் செய்தார்.அவர் இன்னும் சுதந்திரமாக ஆடியிருக்க வேண்டும்.இப்படி பம்முவது அவரது ஆட்டம் அல்ல.அதனால்தான் அவர் பம்முவது,அதுவும் சமீபகாலமாக இது போன்ற தருணங்களில் பம்முவது தனக்குப் புரியாத புதிராக உள்ளது என்றார். ஆனால் இந்திய ரசிகர்களைப் பொறுத்தவரை சச்சின் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்.கடவுள்!

5 ஆம் நாள் ஆட்டம் தொடங்கும் முன் ஆடுகளம் எப்படி இருக்கிறது என்று கூறுகையில் ரவி சாஸ்திரி கூறியதை சச்சின் கேட்டிருக்க வாய்ப்பில்லை.இது 5 ஆம் நாள் ஆடுகளம் இல்லை.முழுக்கவும் ஓட்டங்கள் எடுக்க வாய்ப்புள்ள ஆடுகளம்.வர்ணனை அறையிலிருக்கும் முதியவரான ஜெப்ரி போய் காட்டை விட்டால் இப்போது கூட இந்த ஆடுகளத்தில் சதமெடுக்க முடியுமென்றார்.

ஆனால் 98 ஓவர்களைத் தாக்குப் பிடிக்க முடியாமல் சர்வதேச கிரிக்கெட்டில் ஒட்டுமொத்தமாக சுமார் 50,000 ஓட்டங்களை எடுத்த டிராவிட்,லக்ஷ்மண்,சச்சின் டெண்டுல்கர் மூவர் கூட்டணி தட்டுத் தடுமாறி ஆட்டமிழந்து பெவிலியன் சென்றது பரிதாபத்துக்குரியதாக இருந்தது.

முகுந்தை விட்டு விடுவோம்.கம்பீர்,ராவிட்,லக்ஷ்மண்,ரெய்னா,டோனி இவர்களில் 15 ஓவர்கள் தாக்குப் பிடித்தது ரெய்னா மட்டுமே.மீதமுள்ள 5 வீரர்களும் நன்றாகத் திட்டமிட்டுத் தலைக்கு 15 ஓவர்களை எப்பாடுபட்டாவது நின்றே தீர வேண்டுமென்று மன உறுதியிருந்திருந்தால் கடைசி நாளில் 9 விக்கெட்டுக்களை இழந்து உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வரிசை கொண்ட அணி பரிதாபத் தோல்வியைச் சந்தித்திருக்காது.

தலைக்கு 15 ஓவர்கள் தாக்குப் பிடிக்க எந்த மாதிரியான ஆட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது களத்தில் திட்டமிடப்பட வேண்டிய விடயம்.ஆனால் ஒவ்வொரு தனி வீரரும் தங்களது சொந்த துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்துவதையே பிரதானமாக கொண்டனர்.தாங்கள் ஆட்டமிழந்து விடுவோம் என்ற பயத்திலேயே விளையாடினர்.இதற்கு ஆதாரம் சச்சின்,ராவிட்,லக்ஷ்மண்,டோனி,கம்பீர் ஆகியோர் ஆட்டமிழந்த விதம்.

எப்போதுமே இந்தியா முதல் டெஸ்டில் தோல்வியைத் தழுவுகிறது.பிறகு தொடரை சமன் செய்கிறது என்று சிலர் முந்தைய புள்ளி விபரங்களைக் காண்பிக்கலாம்.ஆனால் இந்த முறை இது நடக்காது என்றே தோன்றுகிறது.இந்த இங்கிலாந்து அணி அது போன்ற அணியல்ல.

இந்த இங்கிலாந்தை வீழ்த்த உடற்றகுதியுடைய ஆக்ரோஷமான ஒரு அணியாக இந்திய அணி மாற வேண்டும்.அதற்கு தொடக்கத்தில் சேவாக் தேவை.டோனி சீரியசாக யோசிக்க வேண்டும்.அதனை விடுத்து ஆட்டக்களம் பந்துகளை உயரவும் தாழவுமாக வரச் செய்தது.துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் வழக்கமான வரிசையில் இறங்க முடியவில்லை என்று தொடர்ச்சியாக நொண்டிச் சாக்குகளைக் கூறும் அணுகுமுறையிலிருந்து டோனி விடுபடுவது நல்லது.

பெயர்களை வைத்து இந்திய அணியை எடைபோட்டு வருகின்றோம்.இந்தத் தொடரைப் பொறுத்தவரை இந்தியா ஒருவித தயாரிப்பும் இல்லாமல் 'எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கும்' என்ற பகவத் கீதை வாசகத்தை நம்பி களமிறங்கியது போல்தான் தோன்றுகிறது.ஆனால் எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

இதுவரை டோனி டெஸ்ட் தொடர் எதையும் இழக்கவில்லை.இந்தத் தொடரிலிருந்து அது தொடங்குமென்று எதிர்பார்க்கலாம்.

இப்போதைக்கு இந்திய அணி விளையாடுவதையும் காயம் பட்டுள்ள வீரர்களையும் பார்க்கும்போது இந்த தொடரை 0-3,அல்லது 1-3 என்று இந்தியா இழக்கும் என்றே தோன்றுகிறது.

இருப்பினும் நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.இந்திய அணி எழுச்சி பெறுமா என்பதை?ஆனால் இதுவும் வெறும் நம்பிக்கை மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்த்தும் பிரிட்டனின் புதிய குடியேற்ற விதிகள்

உலக வலம்

ச.துஷ்யந்தினி

பிரிட்டனில் குடியேற விரும்புவோர் ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற புதிய குடிவரவுச் சட்டத்தை பிரிட்டன் கடந்த வருடம் அறிமுகப்படுத்தியிருந்தது.

குடியேற்றத்தைக் குறைக்கும் நோக்கமே இச் சட்டத்தின் பின்னணியில் காணப்படுகின்ற பிரதான நோக்கமெனினும் அந்நாட்டுச் சமூகத்துடன் ஒன்றி வாழ்வதற்கு ஆங்கில அறிவு அவசியமென்பதே பிரிட்டிஷ் அதிகாரிகளின் வாதமாகும்.




இச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் இது குறித்து எழுந்த வாதப்பிரதிவாதங்களின் போது இச் சட்டத்திற்கு ஆதரவாகக் குரல்கொடுத்த பிரிட்டிஷ் உயர்மட்ட அதிகாரியொருவர் லண்டன் நகர வீதிகளில் தற்போது ஆங்கிலத்தை விட ஏனைய மொழிகளின் பிரயோகத்தையே அதிகளவில் கேட்கக்கூடியதாக இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

ஆங்கிலம் சர்வதேச மொழியாக அங்கீகரிக்கப்பட்டு வரும் நிலையில் ஒரு ஆங்கில நாடு தனது நாட்டில் தனது மொழியின் செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகளில் தவறேதும் இல்லையென்பதே பிரிட்டிஷ் அதிகாரிகளின் நிலைப்பாடாகும்.

பிரிட்டனில் குடியேற விரும்புபவர்கள் தமது மொழியைப் புரிந்து கொள்ளும் ஆற்றலையும் பிரிட்டிஷ் வாழ்க்கை முறை குறித்த அறிவையும் கொண்டிருப்பது பிரிட்டிஷ் சமூகத்தில் விரைவாக இசைவாக்கப்படுவதற்கு உதவியாக இருக்குமென பிரிட்டிஷ் அதிகாரிகள் கருதுகின்றனர்.

குடியேற்ற வாசிகளின் அதிகரிப்பும் இலட்சக்கணக்கில் குவியும் தஞ்சக் கோரிக்கைகளுக்கான விண்ணப்பங்களும் பிரிட்டிஷ் அரசுக்குப் பெரும் தலைவலியை எற்படுத்தியிருக்கும் நிலையிலேயே உள்துறை அமைச்சர் தெரேசா மேயினால் கடந்த ஜூனில் புதிய குடியேற்ற விதிகள் அறிவிக்கப்பட்டன. இந்நிலையில் புதிய விதிகள் மனித உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளதாக வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது.

இவ் விதிகளுக்கு எதிராக மேல் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ள தம்பதியொன்று இவ் விதிகள் திருமண வாழ்க்கை மற்றும் குடும்ப வாழ்க்கை என்பவற்றுக்கான தமது உரிமைகளை மீறுவதாக இருப்பதாகவும் பாரபட்சத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் குடியுரிமையை கொண்ட ராஷிதா சப்தி [வயது 54] என்பவர் தனது கணவரான வாலி சப்தி [வயது 57] பிரிட்டனில் தன்னோடு வசிப்பதற்கான அனுமதியைக் கோரி விண்ணப்பித்திருந்தார்.

திருமணமாகி 37 வருடங்களைக் கடந்த இத் தம்பதியினருக்கு 6 பிள்ளைகள் உண்டு.

இந்நிலையில் இந்தியப்பிரஜையான சப்தியால் ஆங்கிலம் பேசவோ, வாசிக்கவோ அல்லது எழுதவோ முடியாது.

கடந்த 15 வருடங்களாக லண்டனுக்கும் இந்தியாவுக்குமாகப் பறந்து கொண்டிருந்த ராஷிதா சப்தி இறுதியாகத் தனது கணவர் தன்னுடன் பிரிட்டனில் வசிப்பதற்கான அனுமதியைக் கோரி விண்ணப்பித்திருந்தார்.

ஆனால், கடந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட விதிகளின் பிரகாரம் அதாவது பிரிட்டனில் தமது கணவருடன் வசிக்க விரும்புவர்கள் தமது ஆங்கிலத் திறனை நிரூபிக்க வேண்டுமென்ற தேவைப்பாட்டை சப்தியால் நிறைவேற்ற முடியவில்லை.

கடந்த ஜூனில் அறிமுகப்படுத்தப்பட்ட இப்புதிய விதிகள் நவம்பர் முதல் அங்கு அமுலுக்கு வந்தன.

இந்நிலையில், இதற்கெதிராக சப்தியும் ஏனைய இரு தம்பதியினரும் பேர்மிங்ஹாமிலுள்ள மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

மனித உரிமைகள் மீதான ஐரோப்பிய சாசனத்தின் பல சரத்துகளை அதாவது குடும்ப வாழ்க்கைக்கான 8 ஆம் பிரிவு திருமணத்திற்கான 12 ஆம் பிரிவு, பராபட்சத்திற்கு எதிரான 14 ஆம் பிரிவு என்பவற்றை மீறியிருப்பதாக இவ்வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், தேசியம் மற்றும் இனத்துவத்தின் அடிப்படையில் இவ்விதிகள் பாரபட்சம் மிகுந்ததாகக் காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வழக்கு குறித்த விசாரணைகள் இவ்வார இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், இதற்கான தீர்ப்பை பலர் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

தற்போது லண்டன் பல கலாசாரங்களைக் கொண்ட நகராக மாறிவரும் நிலையில் இதனால் தமது கலாசார பாரம்பரியங்கள் சிறிது சிறிது மறையலாமென்ற பிரிட்டிஷ் மக்களின் கவலையும் நியாயமானதே.

ஆனால் காலனித்துவத்தின் மூலம் உலகெங்கும் தமது கால்களைப் பதித்து அங்கெல்லாம் தமது மத,கலாசாரங்களைப் புகுத்தும் முயற்சியில் ஈடுபட்ட இராச்சியம் ஒன்றில் தற்போது பல்லின,பல கலாசாரத்தைக் கொண்ட மக்கள் குவியும் விசித்திரமான மாற்றமொன்று இடம்பெற்று வருகிறது.

எனினும், பிறிதொரு சமூகத்திற்குள் நாம் நுழையத் தயாராகும்போது அச்சமூகத்தின் மொழி மற்றும் பாரம்பரியங்களை அறிந்துகொள்வது அச் சமூகத்துடன் இணைந்து எமது வாழ்க்கையை முன்னெடுப்பதை இலகுவாக்கும்,

தொடர்பாடலின் மிக முக்கிய அம்சமாக விளங்கும் மொழி சமூகங்களுக்கிடையில் நிலவும் இறுக்கமான தன்மையைக் குறைக்கவல்லது.

ஏனவே, எமது கலாசார பாரம்பரியங்களைப் புறந்தள்ளாமல் ஏனைய மொழிகளின் அறிவை வளர்த்துக் கொள்வது வெற்றிக்கான வாய்ப்புகளை உருவாக்கும் வழிவகைகளில் ஒன்றாகும்.

பல கலாசாரங்களையும் உள்வாங்கி எமது சுயத்தை இழப்பதே கவலைக்குரிய விடயமாகும். ஆனால், பலமொழித் திறனைப் பெற்று அதன் மூலம் ஆளுமையைக் கட்டியெழுப்புதல் எந்தச் சூழ்நிலையிலும் வரவேற்கத்தக்கதே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

300711-1.indd 24